**மானியக் கோரிக்கை எண்: 28**

**செய்தி மற்றும் விளம்பரம்**

**பொருளடக்கம்**


| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1 | செய்தி வெளியீட்டுப் பிரிவு | 6 |
| 2 | ஒளிபடப் பிரிவு | 14 |
| 3 | மேற்கோள் பிரிவு | 16 |
| 4 | நினைவகங்கள் | 19 |
| 5 | அரசு விழாக்கள் | 30 |
| 6 | கள விளம்பரம் | 40 |
| 7 | விளம்பரம் | 44 |
| 8 | திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள் | 46 |
| 9 | திரைப்படத்துறையினர் நலவாரியம் | 51 |
| 10 | தமிழ்நாடு திரைப்படப் பிரிவு | 56 |
| 11 | எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் | 69 |
| 12 | திரைப்படம், காணொளி (வீடியோ) மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு | 76 |
| 13 | தமிழரசு | 82 |
| 14 | பொருட்காட்சிப் பிரிவு | 102 |
| 15 | மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் | 110 |
| 16 | மாநிலச் செய்தி நிலையம், சென்னை | 112 |
| | நிறைவுரை | 114 |

'கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்' (குறள் – 1021)

## முன்னுரை

செய்தி மக்கள் தொடர்புத்துறை, அரசு வகுத்துச் செயல்படுத்தும் மக்கள் நலத் திட்டங்களின் பயன்கள் மக்களிடம் முழுமையாகச் சென்றடைவதையும் வளர்ச்சித் திட்டங்கள் பூரண வெற்றி பெற மக்களின் ஒத்துழைப்பை முழுமையாகப் பெற்றிடுவதையும் உறுதி செய்திடும் வகையில் அத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை தமிழக மக்களிடையே ஏற்படுத்துவதைத் தனது தலையாய கடமையாகக் கொண்டு இயங்கி வருகிறது.

அரசின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லவும், அத்திட்டப் பயன்கள் குறித்து மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் வளர்ந்து வரும் விஞ்ஞான வளர்ச்சியோடு இணைந்து புதிய தொழில்நுட்ப உத்திகளையும் வழிமுறைகளையும் பின்பற்றி விளம்பரப் பணிகளை மேற்கொள்ளத் தனது கட்டுப்பாட்டிற்குக் கீழ் உள்ள அனைத்துப் பிரிவுப் பணிகளையும் செய்தி மக்கள் தொடர்புத்துறை ஒருங்கிணைத்துச் சிறப்பாகக் மேற்கொண்டு வருகிறது.

தலைமைச் செயலகத்திலிருந்து இயங்குகின்ற செய்தி வெளியீட்டுப் பிரிவு, ஒளிபடப் பிரிவு, மேற்கோள் பிரிவு, நினைவகங்கள் பிரிவு, விழாக்கள் பிரிவு, கள விளம்பரப் பிரிவு, விளம்பரப் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, தலைமையிடத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, திரைப்படத்துறையினர் நலவாரியம், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், தமிழரசு, சென்னையிலும் புதுடெல்லியிலும் உள்ள செய்தி நிலையங்கள் மற்றும் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவருடன் இணைந்து பணியாற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ஆகிய அனைத்துப்பிரிவுகளின் வாயிலாக ஆக்கப்பூர்வமான பணிகள் மேற்கொண்டு, தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வாழ்கின்ற மக்கள், மாநிலத் தலைமையிடமான தலைமைச் செயலகத்துடன் நேரடித் தொடர்பில் இருக்கும் உணர்வைப் பெறுகின்ற வகையில் செம்மையாகக் கடமையாற்றி வருகிறது செய்தி மக்கள் தொடர்புத்துறை.

‘‘அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு’’ – என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு உயிர் கொடுத்து, தமிழ் மீதும் தமிழ் மக்கள் மீதும் கொண்ட பேரன்பால் தமது சிந்தனைத் திறனையும் செயலாற்றலையும் தமிழ்நாட்டுக்கே நேர்ந்தளித்து, தமிழ் இனம்



நலம் பெறவும் தமிழ் மக்கள் வளம் பெறவும் ‘**மக்களால் நான் – மக்களுக்காகவே நான்**’ என்று தமிழக மக்களுக்காகத் தவவாழ்வு வாழ்ந்து தன் வாழ்வையே அர்ப்பணித்து மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்த திட்டங்களையும் படைத்திட்ட சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் சீரிய பணியை இத்துறை சிறப்புடன் மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழி நடக்கும் தமிழ்நாடு அரசுக்கும், தமிழக மக்களுக்கும் இடையே பாலமாய் அமைந்து நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் வளர்த்து வெளிப்படையான நிருவாகம் மேலோங்க வழிவகுக்கும் சீரிய பணியைச் செய்தி மக்கள் தொடர்புத்துறை தொடர்ந்து தொய்வின்றி மேற்கொள்கிறது.

## செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் உள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவானது அனைத்து நாள்களிலும் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய முக்கியப் பிரிவாகும்.

இப்பிரிவின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் செய்திக் குறிப்புகள், செய்தி வெளியீடுகள், அரசின் அறிவிப்புகள், நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த செய்திகள் ஆகியவற்றையும் அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் செய்திகள் மற்றும் வண்ணப் புகைப்படங்கள், வீடியோ ஒளிப்பதிவுகள் ஆகியவை அனைத்து நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை நாளிதழ்கள், இணையத்தளச் செய்தி நிறுவனங்கள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதேபோன்று தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படும் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகள் போன்றவை மாவட்டப் பதிப்புகளில் வெளியிட ஏதுவாக அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

மேலும், மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள், விழாக்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் குறித்த செய்திகள், புகைப்படங்கள் ஆகியவை மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் பெறப்பட்டு, தலைமையிடத்திலிருந்து வெளியாகும் நாளிதழ்கள்



மற்றும் பிற ஊடகங்களுக்கு இப்பிரிவால் அனுப்பப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் செய்தியாளர் கூட்டங்களுக்கான ஏற்பாடு, மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் பங்கேற்கும் விழாக்கள், முக்கியப் பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்குப் பத்திரிகையாளர் மற்றும் தொலைக்காட்சியினருக்குத் தேவையான உதவிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

### பத்திரிகையாளர் நலன்

### ஓய்வூதியம்

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கி வரும் பத்திரிகையாளர்கள் இரவு, பகல் பாராமல் செய்திகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் தலையாய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வகையில் பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, ஓய்வு பெற்ற நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு அரசால் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற 2011ஆம் ஆண்டிற்குப் பிறகு ரூ.5,000/– ஆக இருந்த ஓய்வூதியம் மூன்று முறை உயர்த்தப்பட்டு ரூ.8,000/–ஆக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 163 பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மேலும், இந்நிதியாண்டில் புதியதாக 20 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2012ஆம் ஆண்டு முதல் பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கொடையின் உச்சவரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாகவும் பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் பெற்ற ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பு ரூ.1.20 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாகவும் இவ்வரசால் உயர்த்தப்பட்டுள்ளது.

## குடும்ப ஓய்வூதியம்

பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தைப் போன்றே குடும்ப ஓய்வூதியமும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற 2011ஆம் ஆண்டிற்குப் பிறகு ரூ.2,500/– ஆக இருந்ததை மூன்று முறை உயர்த்தி ரூ.4,750/– ஆக வழங்க உத்தரவிட்டு, தற்பொழுது 35 பேர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

## குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரார் மற்றும் பிழை திருத்துபவர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டு வருகிறது :

| பணிபுரிந்த ஆண்டுகள் | குடும்ப உதவி நிதித் தொகை |
|---|---|
| 5 | ரூ. 50,000/– |
| 10 | ரூ. 1,00,000/– |
| 15 | ரூ. 1,50,000/– |
| 20 | ரூ. 2,00,000/– |



மேலும், பத்திரிகையாளர் ஓய்வூதியப் பரிசீலனைக் குழுக்கூட்டத்தில், 4 பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் குடும்ப உதவி நிதி வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டு, நிதியுதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## நல நிதியம்

பத்திரிகையாளர் நல நிதியத்திற்கென ஒரு கோடி ரூபாய் நிதி தனியே ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளும்பொழுது, அவர்களுக்கு மேற்படி வைப்பீட்டுத் தொகை வாயிலாகக் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மருத்துவ நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்தகைய நிதியுதவி அதிகபட்சமாக ரூ.50,000 வரை அளிக்கப்படுகிறது.

## அரசு வாடகைக் குடியிருப்பு

பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

## வீட்டுமனை வசதி

இத்திட்டத்தின் கீழ், மாவட்டங்களில் பணியாற்றி வரும் செய்தியாளர்களுக்குச் சொந்த வீடோ அல்லது வீட்டு மனையோ இல்லாத நிலையில் வருவாய்த்துறை மூலம் சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன.

## செய்தியாளர் அங்கீகார அட்டை

அரசு விழாக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களின் வருகையின்பொழுது செய்திகள் சேகரிக்க ஏதுவாகப் பத்திரிகையாளர்களுக்கு அரசால் அமைக்கப்பட்டுள்ள "செய்தியாளர் அங்கீகாரக் குழு"வின் பரிந்துரையின் பேரில், ஆண்டுதோறும் நாளிதழ்கள் / தொலைக்காட்சிகள் / செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்குச் செய்தியாளர் அங்கீகார அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

## செய்தியாளர் அட்டை

நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் பணிபுரியும் செய்தியாளர்களுக்கு அங்கீகார அட்டை வழங்குவது போன்று காலமுறை இதழ்களில் பணியாற்றும் செய்தியாளர்களுக்குச் செய்தியாளர் அட்டை வழங்கப்பட்டு வருகிறது. "செய்தியாளர் அட்டை குழு"வின் பரிந்துரையின் பேரில் வழங்கப்படும். இது காலமுறை இதழ்களின் செய்தியாளர்கள் முக்கிய இடங்களுக்குச் சென்று கட்டுரைகள், வரலாற்று விவரங்கள், செய்திகளின் பின்னணி ஆகியன குறித்த உண்மைத் தன்மையை அறிந்து செய்திகள் வெளியிட உதவியாக அமைகிறது.

## செய்தியாளர்களுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை

பல்வேறு பகுதிகளுக்குச் சென்று செய்திகள் சேகரிப்பதற்கு ஏதுவாக அங்கீகார அட்டை பெற்ற பத்திரிகையாளர்கள் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய



ஆண்டுதோறும் கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் வழங்கப்பட்டு வருகிறது. இச்செலவினம் போக்குவரத்து நிறுவனங்களுக்கு இத்துறையின் மூலம் செலுத்தப்பட்டு வருகிறது.

## செய்தி முகமைகள்

இந்தியப் பத்திரிக்கையாளர் சங்கம், இந்திய ஐக்கியச் செய்திகள் முகவரமைப்பு ஆகிய இரண்டு செய்தி முகமைகள் வெளியிடும் செய்திகள் கீழ்க்காணும் இடங்களில் கணினி மூலம் 24 மணி நேரமும் ஆண்டு முழுவதும் பெறப்படுகின்றன.

(அ) மாண்புமிகு ஆளுநர் மாளிகை

(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லம்

(இ) செய்தி வெளியீட்டுப் பிரிவு, தலைமைச் செயலகம்

இச்செய்தி முகமையின் மூலம் நாடு முழுவதிலிருந்தும் தகவல்கள் பெறப்பட்டு மிக முக்கியமான செய்திகள் உரிய நடவடிக்கைக்காகத் துறைத் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.

## செய்தி மக்கள் தொடர்புத்துறை வலைத்தளம்

வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சிக்கேற்ப ஊடகங்கள் உடனுக்குடன் தங்களுக்குத் தேவையான அரசு சார்ந்த செய்திகள், புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் ஆகியவற்றை வலைத்தளத்தின் வாயிலாக உடனுக்குடன் பெற்றிடவும் அதேபோலப் பொதுமக்களும் இவற்றைப் பார்த்து பயன் அடைய ஏதுவாகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின்

www.tndipr.gov.in என்னும் வலைத்தளம் சிறப்புடன் இயங்கி வருகிறது. செய்தி ஊடகங்கள் இவ்வலைத்தளத்தின் உள் நுழைந்து தங்களுக்குத் தேவையானவற்றைப் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் பொதுமக்கள் இணையதளப் பக்கத்திலேயே அவற்றைப் பார்த்துப் பயன்பெறவும் துறையால் நிமிடத்திற்கு நிமிட அடிப்படையில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

**ஊடக மையம்**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அமைக்கப்பட்ட ஊடக மையத்தின் மூலம் தலைமைச் செயலகச் செய்தியாளர்கள் தங்கள் நிறுவனத்திற்கு உடனுக்குடன் செய்திகளையும் புகைப்படங்களையும் அனுப்பி வருகின்றனர். தலைமைச் செயலகப் பழைய கட்டடத்தின் தரைத் தளத்தில் உள்ள இந்த ஊடக மையமானது விடுமுறை ஏதுமின்றி அனைத்து நாள்களிலும் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது.

தலைமைச் செயலகத்திலிருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் ஊடக மையத்திலிருந்து அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலமாக அந்தந்த மாவட்டப் பதிப்புகளில் வெளியிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், மேற்கண்ட செய்திகள் ஊடகங்களில் வெளியான விவரங்களை, ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலகத்திலுள்ள ஊடக மையத்திற்கு அனுப்புகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்பான செய்தி



வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் மாவட்ட நாளிதழ்களில் சரியாக வெளியிடப்படுகின்றனவா என்ற விவரங்கள் கண்காணிக்கப்படுகின்றன. தலைமையிடத்தில் வெளியிடப்படும் செய்திகள் மாநிலம் முழுவதும் உடனடியாக நாளிதழ்களில் வெளிவருவதில் ஊடக மையம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

## ஒளிபடப் பிரிவு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டம், முக்கியப் பிரமுகர்கள் சந்திப்பு, அரசு விழாக்கள், துறை ஆய்வுக் கூட்டம் மற்றும் இதர நிகழ்ச்சிகள் குறித்த வண்ணப் புகைப்படங்கள் நவீனப் புகைப்படக் கருவிகள் மூலம் எடுக்கப்பட்டு, அவை உடனுக்குடன் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அத்துடன் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடத்திலிருந்தே இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினிகள் மூலம் புகைப்படங்கள் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் தொடர்பான விவரங்களை உடனுக்குடன் பொதுமக்கள் அறியும் வகையில், அந்நிகழ்வுகள் குறித்த விவர அடிக்குறிப்புகளுடன் கூடிய புகைப்படங்கள், தலைமைச் செயலக முதன்மைக் கட்டடத்தில் சீர் பெருமக்களுக்கான மின்தூக்கி அருகில் பொருத்தப்பட்டுள்ள டிஜிட்டல் தொலைக்காட்சி வாயிலாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

இப்பிரிவின் வாயிலாக எடுக்கப்படும் புகைப்படங்கள் அனைத்தும் குறுந்தகடு மற்றும் நிலைவட்டு ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டு, அவை எதிர்காலப் பயன்பாட்டிற்குப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.



## ஒளிபடச்சுருள்களை எண்மயப்படுத்துதல் மற்றும் அதிநவீன ஒளிபடக்கருவிகள் கொள்முதல்

கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.35.46 இலட்சம் மதிப்பீட்டில் தலைமையிட ஒளிபடப் பிரிவில் உள்ள அரிய ஒளிபடச் சுருள்கள் எண்மயப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் புதுடெல்லி செய்தி நிலையம், தலைமையிட ஒளிபடப்பிரிவிற்கு அதிநவீனப் புகைப்படக்கருவிகள் வாங்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## மேற்கோள் பிரிவு

தலைமையிடத்தில் உள்ள மேற்கோள் பிரிவின் மூலம் நாளிதழ்கள், பருவ இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கியச் செய்திகளை நாள்தோறும் அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் மிக முக்கியப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்காகக் காலை, மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், செய்தி நறுக்குகளாகத் தொகுக்கப்பட்டு, அனுப்பும் பணி நாள்தோறும் அதிகாலையிலேயே தொடங்கப்பட்டு, காலையில் அனுப்பப்படுகிறது. அதேபோல் மாலையும் அனுப்பப்படுகிறது. இப்பணிகள் விடுமுறை ஏதுமின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், நாளிதழ்கள், பருவ இதழ்களில் வெளிவரும் முக்கியச் செய்திகள் மாண்புமிகு அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களின் பார்வைக்கும் நடவடிக்கைக்கும் தொகுத்து நாள்தோறும் அனுப்பும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோன்று நாளிதழ்களில் அனைத்துத் துறைகள் தொடர்பாக வெளிவரும் முக்கியச் செய்திகள் கனிவருடி (ஸ்கேன்) செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களுக்கு மின்னஞ்சல் மூலம் நாள்தோறும்



காலையில் அனுப்பப்பட்டு வருகின்றன. இச்செய்திகள் குறித்து உடனுக்குடன் அத்துறையின் செயலாளர்கள் அறியும் பொருட்டு அவர்தம் கைப்பேசிகளுக்குக் குறுஞ்செய்திகளாகவும் அனுப்பப்படுகின்றன. மேலும், துறைத் தலைவர்களுக்கும் இக்குறுஞ்செய்திகளை, கட்செவி (வாட்ஸ்ஆப்) மற்றும் மின்னஞ்சல்கள் மூலம் அனுப்பும் சிறப்புப் பணியையும் இப்பிரிவு நாள்தோறும் மேற்கொள்கிறது.

தமிழ் மற்றும் ஆங்கில முக்கியமான நாளிதழ்கள் முறையாகத் தொகுக்கப்பட்டு, கட்டுமானம் செய்யப்பட்டு எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் காலங்களிலும் அவ்வப்பொழுது தேவைப்படும் நேரத்திலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கும் மாண்புமிகு அமைச்சர்கள், துறைச்செயலாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்கக் காலச்சுவடுகளின் தொகுப்பாக விளங்கும் பழைய நாளிதழ்கள் நவீன மின்னணு முறையில் எண்மயம் செய்யப்படுகின்றன. மேற்கோள் பிரிவில் பராமரிக்கப்படும் நாளிதழ்களின் முக்கியச் செய்திகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், பேட்டிகள், அரசின் சாதனைகள், வழங்கப்படும் அரசு நலத்திட்ட உதவிகள் போன்றவை அடங்கிய தகவல்களும் நாளிதழ்களின்

தலையங்கங்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் மற்றும் பல்வேறு தலைவர்களின் கருத்துக்கள் போன்றவையும் தனித்தனித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டு மின்னணு முறையில் எண்மயப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

பழைய நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களைப் பாதுகாத்திடும் வகையில் மேற்கோள்பிரிவு புனரமைப்பு செய்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

**ஊடகங்களில் பாராட்டு**

ஒவ்வொரு ஆண்டும் நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் வெளிமாநில நாளிதழ்களின் முக்கியச் செய்திகள் தொகுக்கப்பட்டு, பத்திரிகையின் பார்வையில் ஒளிரும் சாதனைகள், சாதனை புரிந்த ஈராண்டு! சரித்திரம் பேசும் பல்லாண்டு!!, மூன்றாண்டு ஆட்சி முழுமையான வளர்ச்சி, ''ஊடகங்களில் பாராட்டு, மீடியா பிரைசஸ்'' என்னும் தலைப்புகளில் சிறப்பு சாதனை மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன.



## நினைவகங்கள்

தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த பெருந்தலைவர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுத் தம் வாழ்வையே அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றுத் தியாகங்கள் பல புரிந்து, தமது இன்னுயிர் நீத்தத் தியாகச் செம்மல்கள் ஆகியோரது நினைவைப் போற்றும் வகையில், அவர்தம் பெயரால் நினைவகங்கள் அமைத்து, அந்நினைவகங்களைப் பொதுமக்கள் மற்றும் வளரும் சந்ததியினர் கண்டு பயன்பெறும் வகையில் சீருடன் பராமரித்து, அப்பெரியோர்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் நினைவகங்கள் பிரிவு பணியாற்றி வருகிறது.

தமிழகத்தில் 64 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள் மற்றும் 1 நினைவுச் சின்னம் ஆகியன செய்தி மக்கள் தொடர்புத் துறையால் உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் புதியதாக 2 மணிமண்டபங்கள் கட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

## 1. நினைவகங்கள்

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 2 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் (ம) புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 3 | பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 4 | பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 5 | காந்தி மண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 6 | மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 7 | மகாகவி பாரதியார் நினைவு இல்லம் | துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை |
| 8 | பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் | திருமலைச் சாலை, தியாகராயநகர், சென்னை |
| 9 | வள்ளுவர் கோட்டம் | நுங்கம்பாக்கம், சென்னை |
| 10 | மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 11 | தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |



| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 12 | இரட்டைமலை சீனிவாசன் நினைவகம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 13 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம் | டாம்ஸ் சாலை, சென்னை |
| 14 | பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் | காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 15 | திருப்பூர் குமரன் நினைவகம் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 16 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 17 | தந்தை பெரியார் நினைவகம் | வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம் |
| 18 | பெரியார்–அண்ணா நினைவகம் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 19 | தீரன் சின்னமலை மணிமண்டபம் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 20 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 21 | வள்ளல் அதியமான் கோட்டம் | தருமபுரி, தருமபுரி மாவட்டம் |
| 22 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 23 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம் | வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 24 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 25 | தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் | தில்லையாடி, நாகபட்டினம் மாவட்டம் |
| 26 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 27 | தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம் | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 28 | கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 29 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 30 | மருதுபாண்டியர் நினைவு மண்டபம் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 31 | தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் | தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 32 | தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 33 | பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |



| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 34 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 35 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 36 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 37 | மகாகவி பாரதியார் மணிமண்டபம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 38 | மகாகவி பாரதியார் இல்லம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 39 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம் | ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 40 | வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 41 | சுதந்திரப்போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம் | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 42 | சுதந்திரப்போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 43 | அமுதகவி உமறுப்புலவர் நினைவகம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 44 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 45 | பூலித்தேவன் நினைவு மாளிகை | நெற்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 46 | தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 47 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 48 | காந்தி நினைவு மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 49 | பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 50 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம் | இடலாக்குடி, கோட்டாறு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 51 | முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜ சிங்கன் நினைவகம்) | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 52 | தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 53 | தமிழிசை மூவர் மணிமண்டபம் | சீர்காழி, நாகபட்டினம் மாவட்டம் |
| 54 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம் | விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம் |



| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 55 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம் | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 56 | விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 57 | தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் | செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 58 | மார்ஷல் நேசமணி மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 59 | வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 60 | தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 61 | வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 62 | சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபம் மற்றும் நூலகம் | இராயபுரம், சென்னை |
| 63 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் மணிமண்டபம் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 64 | மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் | திருவாரூர் மாவட்டம் |

## 2. அரங்கங்கள்

| வ. எண் | அரங்கம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | இராஜாஜி மண்டபம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 2 | அண்ணா கலை அரங்கம் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 3 | மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம் | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் |
| 4 | கலைவாணர் அரங்கம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |

## 3. நினைவுத் தூண்கள்

| வ. எண் | நினைவுத் தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 2 | சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் | போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 3 | குடியரசு பொன்விழா நினைவுத் தூண் | காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை |



| வ. எண் | நினைவுத் தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 4 | சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 5 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |

## 4. நினைவுச் சின்னம்

| வ. எண் | நினைவுச் சின்னம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |

## 2011 முதல் 2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள்

- கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் பல்வேறு மாவட்டங்களில் புதியதாக மணிமண்டபங்கள் / நினைவுச் சின்னம் மற்றும் நினைவு மண்டபங்கள் ஆகியவை ரூ.74.53 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.35.34 இலட்சம் மதிப்பீட்டில் தலைவர்களுக்குச் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.26.43 கோடி மதிப்பீட்டில் பல்வேறு மாவட்டங்களில் தலைவர்களின் நினைவிடம், நினைவு இல்லம் மற்றும் நினைவகங்கள் ஆகியவை புனரமைக்கப்பட்டுள்ளன.

- சென்னை, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தினுள் மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் நினைவு மண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, பொதுப்பணித்துறையால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கோயம்புத்தூர் மாவட்டம், கொண்டையம்பாளையம் கிராமத்தில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, பொதுப்பணித்துறையால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மணிமண்டபம் மற்றும் பூங்கா

- மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் திருவாரூரில் மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 7.3.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டபடி, சென்னை, பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்திற்குள் உள்ள 3 ஏக்கர் பரப்பளவிலான இடத்தில் பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் இயற்கை எழில் கொஞ்சும் பூங்கா உருவாக்கப்பட்டு 23.5.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



## 6. பணி முன்னேற்றத்தில் உள்ள மணிமண்டபங்கள் மற்றும் இதரப் பணிகள்

| வ. எண் | மணிமண்டபம் / கலையரங்கம் | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் மணிமண்டபம், திண்டுக்கல் மாவட்டம் | ரூ.1.30 கோடி | கட்டுமானப் பணிகள் முடிவுற்று மணிமண்டபம் திறக்கப்படும் தறுவாயில் உள்ளது. |
| 2 | சுவாமி சகஜானந்தா மணிமண்டபம், சிதம்பரம், கடலூர் மாவட்டம் | ரூ.1.15 கோடி | கட்டுமானப் பணிகள் முடிவுற்று மணிமண்டபம் திறக்கப்படும் தறுவாயில் உள்ளது. |
| 3 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவகம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் | ரூ.85.00 இலட்சம் | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4 | நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டம், அடையாறு, சென்னை | ரூ.2.80 கோடி | கட்டுமானப் பணிகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன |

# அரசு விழாக்கள்

தமிழ்ச் சான்றோர்களையும் சுதந்திரப் போராட்டத் தியாகத் தலைவர்களையும் நினைவுகூர்ந்து பெருமைப்படுத்தவும் அவர்களது வாழ்க்கை வரலாற்றை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து எழுச்சி பெறவும் அப்பெரியோர்களின் பிறந்த நாள் விழாக்களையும் நினைவு நாள் நிகழ்ச்சிகளையும் அரசு நடத்துகிறது.

இத்தகைய விழாக்களில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் பங்கேற்று அன்னோரின் திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலைகள் அணிவித்தும் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செலுத்துகின்றனர். சென்னை மாவட்டத்தில் 27 தலைவர்களுக்கும் பிற மாவட்டங்களில் 30 தலைவர்களுக்கும் அன்னார் பிறந்த நாள் மற்றும் நினைவு நாள்களில் அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும் மலர் தூவியும் மரியாதை செலுத்தப்படுகிறது.



## 1. சென்னையில் நடத்தப்படும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் விழா |
| 5 | ஏப்ரல் 14 | டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா |
| 6 | ஏப்ரல் 17 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா |
| 7 | ஏப்ரல் 27 | சர்.பிட்டி.தியாகராயர் பிறந்த நாள் விழா |
| 8 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா |
| 9 | மே 10 | சித்திரை முழு நிலவு நாளன்று கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவப் படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர்தூவி மரியாதை செய்தல் |
| 10 | ஜூன் 5 | கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள் விழா |
| 11 | ஜூன் 24 | கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா |
| 12 | ஜூலை 7 | இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 13 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா |
| 14 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |
| 15 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி சங்கரலிங்கனார் |
| 16 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி செண்பகராமன் |
| 17 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா |
| 18 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 19 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா |
| 20 | செப்டம்பர் 29 | முன்னாள் சென்னை மேயர் சிவராஜ் பிறந்த நாள் விழா |
| 21 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா |
| 22 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா |
| 23 | நவம்பர் 8 | தமிழறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள் விழா |
| 24 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா |
| 25 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா |
| 26 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா |
| 27 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா |



## 2. மாவட்டங்களில் நடத்தப்படும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | ஜனவரி 3 | வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் விழா | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | பிப்ரவரி 7 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்த நாள் விழா | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 3 | பிப்ரவரி 9 (தைப்பூசத் திருநாள்) | திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா | மதுரை, மதுரை மாவட்டம் |
| 4 | பிப்ரவரி 19 | தமிழ்த்தாத்தா உ.வே.சா. பிறந்த நாள் விழா | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 5 | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழா | இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 6 | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 7 | ஏப்ரல் 17 | தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம். |
| 8 | மே 12 (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் |
| 9 | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் விழா | திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 10 | ஜூன் 12 | மார்ஷல் நேசமணி பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 11 | ஜூன் 16 | தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் விழா | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 12 | ஜூன் 18 | தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் விழா | மேலூர் அருகில், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 13 | ஜூலை 6 | தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் பிறந்த நாள்விழா | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 14 | ஜூலை 11 | வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா | கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் |
| 15 | ஜூலை 17 | தியாகிகள் தினம் – தியாகி வாஞ்சிநாதன் | செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 16 | ஜூலை 31 | சதாவதானி செய்குதம்பி பாவலர் பிறந்த நாள் விழா | இடலாக்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 17 | ஆகஸ்ட் 2 மற்றும் 3 | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 18 | ஆகஸ்ட் 3 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |



| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 19 | ஆகஸ்ட் 3 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | நினைவுச்சின்னம், சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 20 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 21 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 22 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 23 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 24 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | அனைத்து மாவட்டங்கள் |
| 25 | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் விழா | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 26 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 27 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 28 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா | பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 29 | நவம்பர் 1 | கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்துடன் இணைந்த நாளை முன்னிட்டு மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 30 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 31 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 32 | டிசம்பர் 15 | அதங்கோட்டாசான் விழா | அதங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் |

**3. 2011 முதல் 2016 வரையிலான ஐந்தாண்டுகளில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டுக் கொண்டாடப்படும் விழாக்கள்**

- கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைய அரும்பாடுபட்ட மார்ஷல் நேசமணி அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில், தமிழ்நாட்டுடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைந்த நாளான



நவம்பர் 1–ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

- தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த தலைவர் இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 7–ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.
- சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் விடுதலைப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாரின் பிறந்தநாள் விழா ஆண்டுதோறும் ஜனவரித் திங்கள் 3–ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.
- மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் மிகவும் முக்கியமான மன்னரான திருமலை நாயக்கர் அவர்களின் பிறந்த நாள் ஆண்டுதோறும் தைப்பூசத்தன்று மதுரை மாவட்டத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது.
- கொடிகாத்த குமரன் அவர்களின் பிறந்த நாள் ஆண்டு தோறும் அக்டோபர்த் திங்கள் நான்காம் நாள் திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் கொண்டாடப்பட்டு வருகிறது.
- விடுதலைப் போராட்ட வீரர் தியாகி வாஞ்சிநாதன் அவர்களின் பிறந்த நாள் விழா தியாகிகள் தினமான ஜூலைத் திங்கள் 17ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

## 4. பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா

- பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா தமிழ்நாடு அரசின் சார்பில் ஜூன் 2017 முதல் ஜனவரி 2018 வரை தமிழ்நாடு முழுவதும் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. மாநில அளவில் இந்நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் குழு அமைக்கப்பட்டும் மாவட்டந்தோறும் சிறப்பாகக் கொண்டாட மாவட்ட அளவில் குழு அமைக்கப்பட்டும் இந்நூற்றாண்டு விழா கொண்டாட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- இதன்படி கடந்த 30.6.2017 அன்று மதுரை மாநகரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் சீரோடும் சிறப்போடும் தொடங்கியது. தமிழகம் முழுமையும் 30.12.2017 கால அளவிற்குள்ளாக 31 மாவட்டங்களிலும் டாக்டர் எம்.ஜி.ஆர்.அவர்களின் நூற்றாண்டு விழா மிகச்சிறப்புடன் கொண்டாடப்பட்டு அதன் நிறைவு விழா 2018 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் மாநில அளவில் சென்னையில் மிகச்சிறப்பாக மிகவும் பிரம்மாண்டமான முறையில் கொண்டாட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



- பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் புகழ் நிலைத்திடும் வகையிலும் அவரது பெருமையை பொதுமக்கள் அறியும் வகையிலும் கொண்டாடப்படும் இந்த நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சி, பேரணி, பள்ளி கல்லூரிகளில் விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவை நடத்தப்படும்.

## 5. அரசு சார்பில் கொண்டாடப்படும் சிறப்பு விழா

- ஆண்டுதோறும் ஜனவரித் திங்கள் திருவள்ளுவர் தினத்தன்று, தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் செய்தித்துறை இணைந்து திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் அறிஞர் பெருமக்களுக்குத் திருவள்ளுவர் விருது, தந்தை பெரியார் விருது, பேரறிஞர் அண்ணா விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பெருந்தலைவர் காமராஜர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது மற்றும் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது ஆகிய விருதுகள் வழங்கப்படுகின்றன.

## கள விளம்பரம்

தமிழகத்தின் குக்கிராமங்களில் உள்ள மக்களும் அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் உடனுக்குடன் நேரடியாக அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பரப் படுத்துவதையும் தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள் வாயிலாகச் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, 2013 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி முதன்முதலாகக் 'கள விளம்பரப் பிரிவு' எனும் புதிய பிரிவு செய்தித்துறையில் உருவாக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

### மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனம்

இப்பிரிவின் வாயிலாக நவீனத் தொழில்நுட்ப முறையில் மின்னணு விளம்பரத்திரை பொருத்திய 32 புதிய மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்த மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்கள் பகல், இரவு உட்பட அனைத்து நேரங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும் அரசு விழாக்கள் நடைபெறும் இடங்களிலும் அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த விளம்பரப் பணிகளை மேற்கொள்ளும் வகைகளில் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த விளம்பரக் காட்சி ஊர்திகளின் அன்றாட நடமாட்டத்தை மின்னணு இடம் காணல் கருவி வாயிலாகக் குக்கிராமம், கிராம ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி உள்ளிட்ட எந்தப் பகுதியில் மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனம் மூலம் விளம்பரப்பணி நடைபெற்று வருகிறது என்பதைக் கண்காணிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.



### மின்னணு விளம்பரத் திரைகள்

அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை விவரங்களை, அனைத்துப் பகுதி மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் சென்னையில் 10 அம்மா உணவகங்கள் போன்ற மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் மின்னணு விளம்பரத் திரைகள் நிறுவப்பட்டு, இதன் மூலம் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த விளம்பரப் பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

### தகவல் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தகவல் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி ஒன்று கள விளம்பரப் பிரிவில் புதியதாக உருவாக்கப்பட்டது. இதன் வாயிலாக அரசின் திட்டங்களும் சாதனை விவரங்களும் துறைகள் வாரியாகவும் மாவட்டங்கள் வாரியாகவும் தொகுப்பதற்காக, புதிதாக மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டது.

இந்த மென்பொருளைப் பயன்படுத்தித் தமிழ்நாடு அரசு சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு துறைகள்

வாயிலாகச் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள், அரசால் வழங்கப்படும் உதவித் தொகையினைப் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையும் இப்பயனாளிகளின் பெயர் மற்றும் முகவரி போன்ற விவரங்களையும் மாவட்ட வாரியாக ஒவ்வொரு துறையிலிருந்தும் நியமிக்கப்படும் பொறுப்பு அலுவலர் மூலம் அந்தந்தத் துறை அலுவலர்கள் அந்தந்த மாவட்டங்களில் ஒவ்வொரு நாளும் இணையவழி பதிவேற்றம் செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

## அலுவலர்களின் பணி மதிப்பீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளான, செய்தியாளர் கூட்டங்கள் நடத்துதல், நாளிதழ்களில் வெற்றிக் கதைகள் வெளிவரச் செய்தல், வீடியோ படக்காட்சிகள் நடத்துதல், திரையரங்கு ஆய்வு மேற்கொள்ளுதல், சிறப்பு வெளியீடுகள் பிரசுரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஆய்வு செய்து, அதற்கென மதிப்பெண்கள் வழங்கி அவர்களின் பணிகளை மாதந்தோறும், இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழு தரமதிப்பீடு செய்வதன் மூலம் மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கிடையே ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டுள்ளது.

## புத்தாக்கப் பயிற்சி

செய்தி மக்கள் தொடர்புத்துறையில் பணியாற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் புகைப்படக்கலைஞர்களுக்கு வளர்ந்து வரும் புதிய தொழில் நுட்பங்களுக்கேற்பத் தங்களது



பணித்திறனை மேம்படுத்திக் கொள்ள ஆண்டுதோறும் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இப்புத்தாக்கப் பயிற்சியில், தங்களது பணித் திறனை மேம்படுத்திக்கொள்வதற்கான உத்திகள், நல் ஆளுமைப் பயிற்சி, தகவல் அறியும் உரிமைச் சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகள், நீதிமன்ற வழக்குகளைக் கையாளுவது, சமூக ஊடகங்களில் செய்தித்துறையின் பணிகள், புதிய தொழில் நுட்பங்களை எளிய முறையில் கையாளுவது குறித்த கணினிப் பயிற்சி, உடல் மற்றும் மன வளத்திறன்களை மேம்படுத்திக் கொள்ள யோகா பயிற்சி உள்ளிட்டவை இடம்பெறுகின்றன.

## விளம்பரம்

தமிழ்நாடு அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூகநலப் பணிகளை மக்கள் முழுமையாக அறிந்து பயன்பெறும் வகையில் நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் ஆகியவற்றில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இதேபோன்று தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஏனைய பணிகள் குறித்து வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களையும் இத்துறை வெளியிட்டு வருகின்றது.

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களை, நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாக இத்துறை செயல்பட்டு வருகிறது.

மேலும், விளம்பரத்தின் சிறப்புக்கேற்ப இந்திய வர்த்தக இதழிலும் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

### ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்

நவீன மின்னணு தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில், ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் தேசியத் தகவல் மையத்தின் வழியாக, தமிழக அரசின் www.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. www.tenders.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை விலையேதுமின்றிப் பதிவிறக்கம் செய்ய முடியும். ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதோடு,



இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்மூலம் தகுதியான அனைவரும் தமிழக அரசு கோரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பாகுபாடு இன்றிப் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்

அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், அவை வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இயற்றப்பட்டு, அவற்றின் அடிப்படையில் மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.25 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளிகள், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளிகள், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

# திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

## திரைப்பட விருதுகள்

தமிழ்நாடு அரசு சார்பில், சமுதாயச் சிந்தனைகளுடன் கூடிய சிறந்த கலைப்படைப்புகள், மனித நல்லுணர்வுகளைப் வெளிப்படுத்தும் தரமான திரைப்படங்களை ஊக்கப்படுத்திடும் வகையில் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கான விருதுகளைப் பெறுவதற்குத் தகுதியான நபர்களைத் தேர்வு செய்வதற்காகத் தமிழ்நாடு அரசால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

அக்குழு தேர்ந்தெடுத்துப் பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக ரூ.2 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ.1 இலட்சம், மூன்றாம் பரிசாக ரூ.75 ஆயிரம், சிறப்புப் பரிசாக ரூ.75 ஆயிரம் ரொக்கமும் முறையே நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மகளிரைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக ரூ.1.25 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் (சிறப்புப்பரிசு), சிறந்த நடிகை (சிறப்புப்பரிசு), சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த



குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடலாசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த பின்னணிப் பாடகர், சிறந்த பின்னணிப் பாடகி, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த திரைப்படத் தொகுப்பாளர், சிறந்த கலை இயக்குநர், சிறந்த சண்டைப் பயிற்சியாளர், சிறந்த நடன ஆசிரியர், சிறந்த ஒப்பனைக் கலைஞர், சிறந்த தையற்கலைஞர், சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (ஆண்) மற்றும் சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (பெண்) எனத் திரைப்படத் துறையில் சாதனை படைத்தவர்களுக்கு முறையே 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு, சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

## கலைத்துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த்திரை உலகில் தமது எழுத்தாலும் நடிப்பாலும் தனிமுத்திரை பதித்த பேரறிஞர் அண்ணா, மக்களைச் சிரிப்பின் மூலம் சிந்திக்க வைத்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், கருநாடகச் சங்கீத வித்வான் தியாகராஜ பாகவதர், உழைப்பால் உயர்ந்த ராஜாசாண்டோ, மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்ட மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., அழியாப் பாடல்கள் படைத்த கவியரசு கண்ணதாசன், நடிப்பிற்கே இலக்கணமாகத் திகழ்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரின் பெயர்களில் கலைத்துறை வித்தகர் விருதுகள் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத்துறை வித்தகர்களுக்கு, முறையே 5 பவுன் தங்கப்பதக்கமும் நினைவுப்பரிசும் வழங்கப்படுகின்றன.

## அரசு திரைப்பட மானியம்

சமூகப் பொறுப்பும் சமுதாய விழிப்புணர்ச்சி மிக்க திரைப்படங்களைத் தரமாகவும் சிறிய முதலீட்டிலும் தயாரித்து வெளியிடுபவர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்ப் படங்கள் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு திரைப்படத்திற்கும் இத்திட்டத்தின்கீழ் ரூ.7 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

## சின்னத்திரை விருதுகள்

மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப்பெரும் பங்கு வகித்து வரும் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள், தொடர்கள், அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில், சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நல்ல தரமான சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக ரூ.2 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ.1 இலட்சம் ரொக்கமும் முறையே நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமின்றி, சிறந்த கதை ஆசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர்,



சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர்,சிறந்தகுணச்சித்திரநடிகை,சிறந்தவில்லன்நடிகர்,சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணி குரல் கொடுப்பவர் (ஆண்), சிறந்த பின்னணி குரல் கொடுப்பவர் (பெண்) மற்றும் சிறந்த தந்திரக் காட்சியாளர் எனச் சின்னத்திரைத் துறையில் சிறந்து விளங்குபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு முறையே 3 பவுன் தங்கப்பதக்கமும் நினைவுப் பரிசும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர், சிறந்த வாழ்நாள் சாதனையாளர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு முறையே ரூ.1 இலட்சம் ரொக்கமும் நினைவுப் பரிசும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திரைப்பட உலகிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினைச் சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஏதுவாகஇந்தியாவிலேயேமுதன்முறையாகத்தமிழ்நாடுஅரசின் சார்பில் இவ்விழாவினை நடத்திய தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு ரூ.10 கோடி மானியமாக வழங்கினார்கள். இந்திய சினிமா நூற்றாண்டு விழா சென்னையில் 21.9.2013 முதல் 24.9.2013 வரை சிறப்பாக நடைபெற்றது. இந்திய சினிமா நூற்றாண்டு விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் பிற மாநில முதலமைச்சர்களும் கலந்து கொண்டு, சிறப்பு செய்தனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க, சென்னையில் 14.12.2011 முதல் 22.12.2011 வரை நடைபெற்ற ஒன்பதாவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.25 இலட்சம் மானியமும் 12.12.2012 முதல் 20.12.2012 வரை நடைபெற்ற பத்தாவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.50 இலட்சம் மானியமும் 12.12.2013 முதல் 19.12.2013 வரை நடைபெற்ற பதினோராவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.50 இலட்சம் மானியமும் 18.12.2014 முதல் 25.12.2014 வரை நடைபெற்ற பன்னிரெண்டாவது சென்னை சர்வதேசதிரைப்படவிழாவிற்கு ரூ.50இலட்சம்மானியமும்மற்றும் 6.1.2016 முதல் 13.1.2016 வரை நடைபெற்ற பதின்மூன்றாவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.50 இலட்சம் மானியமும் தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்டன.



## திரைப்படத்துறையினர் நலவாரியம்

திரைப்படத்துறை, சின்னத்திரை, அவை சார்புடைய தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் உதவிடும் நோக்கிலும், அவர்கள் வளமுடன் வாழ வழிவகை செய்யும் எண்ணத்திலும், திரைப்படத்துறையினர் நலவாரியத்தினைத் தோற்றுவித்து, இவர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளைத் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

திரைப்படத்துறையினர் நலவாரியத்தில் 41 சங்கங்களைச் சேர்ந்த திரைப்பட / சின்னத்திரைத் தொழிலாளர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேரத் தகுதி பெற்றவர்கள் ஆவர். இந்நலவாரியத்தில் இதுவரை சுமார் 21,045 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர்.

திரைப்படத்துறை, சின்னத்திரையின் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவு உதவித்தொகை, மூக்குக்கண்ணாடி உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவித்தொகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன.

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித்தொகை |
|---|---|---|
| 1 | **விபத்து ஈட்டுறுதித் திட்டம்**<br>(அ) விபத்தினால் ஏற்படும் மரணம்<br>(ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | <br>ரூ.1,00,000<br>ரூ.10,000 முதல்<br>ரூ.1,00,000 வரை |
| 2 | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |
| 3 | ஈமச் சடங்கு மரணத்திற்கான உதவித் தொகை | ரூ.2,000 |
| 4 | **கல்வி உதவித் தொகை** | |
| அ) | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| இ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்க்கு (இரு பாலருக்கும்) | ரூ.1,500 |
| ஈ) | முறையான பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு (இரு பாலருக்கும்) | ரூ.1,500 |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | ரூ.1,750 |
| உ) | முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | ரூ.2,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப் மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | ரூ.3,000 |
| ஊ) | தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | ரூ.2,000 |



| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித்தொகை |
|---|---|---|
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | ரூ.4,000 |
| எ) | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (இரு பாலருக்கும்) | ரூ.4,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | ரூ.6,000 |
| ஏ) | ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி அல்லது பலவகை தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | ரூ.1,000 |
| | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பலவகை தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | ரூ.1,200 |
| 5 | திருமண உதவித் தொகை | ரூ.2,000 |
| 6 | மகப்பேறு உதவித் தொகை | ரூ.6,000 |
| 7 | கருக்கலைப்பு / கருச்சிதைவு உதவித் தொகை | ரூ.3,000 |
| 8 | மூக்குக் கண்ணாடிச் செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 |

திரைப்படத்துறையினர் நலவாரியத்தின் மூலம் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகளுக்கான விவரங்கள் ஆண்டுவாரியாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

| வ. எண் | ஆண்டு | மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2011 | 38 | 1,98,000/– |
| 2 | 2013 | 728 | 21,39,000/– |
| 3 | 2014 | 303 | 8,00,000/– |
| 4 | 2016 | 277 | 8,00,250/– |
| | மொத்தம் | 1,346 | 39,37,250/– |

2017ஆம் ஆண்டில் பல்வேறு நலத்திட்டங்களுக்காக 259 பயனாளிகளுக்கு ரூ.9.42 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

திரைப்படத்துறையினர் நலவாரியத்திற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் உறுப்பினர் / செயலாளராகவும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர். திரைப்படத்துறையினர் நலவாரியத்திற்கு வரப்பெற்ற விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, பயனாளிகளைத் தேர்வு செய்து, நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்குத் திரைப்படத்துறையினர் நலவாரியத்திற்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமித்துத் தமிழக அரசால் ஆணைபிறப்பிக்கப்பட்டு, கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



| வ. எண் | அலுவல் சாரா உறுப்பினர்கள் | வ. எண் | அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| 1 | **(திருவாளர்கள்)** புஷ்பா கந்தசாமி, தயாரிப்பாளர் | 1 | தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் |
| 2 | ஆர்.வி. உதயகுமார், தயாரிப்பாளர் / இயக்குநர் | 2 | நிதித்துறைச் செயலாளர் |
| 3 | பி. வாசு, இயக்குநர் | 3 | வருவாய்த்துறைச் செயலாளர் |
| 4 | லியாகத் அலிகான், வசனகர்த்தா | 4 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறைச் செயலாளர் |
| 5 | சி.வி. ராஜேந்திரன், இயக்குநர் | 5 | வணிகவரித்துறை ஆணையர் |
| 6 | மோகன் காந்திராமன், தயாரிப்பாளர் / இயக்குநர் | 6 | உள்துறைத் துணைச் செயலாளர் (சினிமா) |
| 7 | ராமராஜன், நடிகர் / தயாரிப்பாளர் / இயக்குநர் | 7 | தொழிலாளர் நலத்துறை ஆணையர் |
| 8 | டி.கே.கலா, நடிகை மற்றும் பாடகி | 8 | நில நிருவாகத்துறை ஆணையர் |
| 9 | எல்.ஆர்.ஈஸ்வரி, திரைப்படப் பின்னணிப் பாடகி | | |

இவ்வாரியத்தின் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களை இக்குழு பரிசீலித்துப் பயனாளிகளைத் தேர்வு செய்கிறது.

# தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

## செய்திப் படப்பிடிப்பு

மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் அரசு சார்ந்த நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் முக்கியமான நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்து அவற்றைத் தொகுத்துச் செய்தி மலராக வெளியிடும் விளம்பரப் பணிகளைத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## குறும்பாடல்கள் மற்றும் குறும்படங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்திய பல முத்தான திட்டங்கள் குறித்து 138 சிறப்புக் குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு, தமிழகத்தின் அனைத்து டிஜிட்டல் திரையரங்குகளிலும் திரையிடப்பட்டன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட 147 காணொலிக்காட்சி நிகழ்ச்சிகள் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் மூலம் தொகுக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் மூலமும் பொதுமக்களுக்கு ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

## வாரச் செய்தித் தொகுப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி மூலம் துவக்கப்பட்ட புதிய திட்டங்களைச் செய்தித் தொகுப்புகளாகத் தயாரித்துக் குறுந்தகடுகளில் பதிவேற்றம் செய்து வாரந்தோறும் கள விளம்பரப் பணிகளை மேற்கொள்ள அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு



அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

## படக்காட்சி செய்தி மலர்கள்

தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள், அறிவிப்புகள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய படக்காட்சி செய்தி மலர்களைத் தயாரித்து அனைத்து டிஜிட்டல் சினிமா திரையரங்குகளில் வெளியிடுவது மற்றும் குறுந்தகடுகளில் பதிவேற்றம் செய்து அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் அனுப்பி, பொதுமக்கள் கூடும் இடங்களில் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலக வீடியோ வாகனங்கள் மூலமாகக் கள விளம்பரப் பணிகளை மேற்கொள்வது தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் முக்கியப் பணியாகும்.

மேலும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் அம்மா உணவகங்களிலும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்றவாறு படக்காட்சி, செய்தி மலர்கள் LED திரைக்குப் பதிவேற்றம் செய்யப்பட்டு, திரையிடப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பொதுமக்கள் அனைவருக்கும் அரசுத் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் நிகழ்ச்சிகள் அனைத்தும் இப்பிரிவின் மூலம் ஒளிப்பதிவு செய்யப்பட்டு, அவற்றை அனைத்து ஊடகங்களுக்கும் தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையத்தின் மூலம் படக்காட்சிகளாக அனுப்பப்பட்டு வருகின்றன. இதற்கெனத் தனியே உயர் தொழில்நுட்ப மடிக்கணினி ஒன்று வாங்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது.

2011 முதல் 2017 வரையிலான 6 ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை மக்களுக்கு விளக்கிக் கூறும் வகையில் 138 படக்காட்சி செய்தி மலர்களும் 50 குறும்படங்கள் கொண்ட 7 தொகுப்புகளும் 7 வாரச் செய்தித் தொகுப்புகளும் கீழ்க்கண்ட தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன.

| வ. எண் | படக்காட்சி செய்தி மலர்கள் |
|---|---|
| 1 | மலர்ந்தது அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி |
| 2 | மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைகள் |
| 3 | அம்மாவும் அன்னைத் தமிழும் |
| 4 | அம்மாவின் செயற்கரிய செயல்பாட்டில் சிகரம் தொட்ட பள்ளிக் கல்வித் துறை |
| 5 | அம்மா காட்டும் கல்விப்பாதை |
| 6 | அம்மா உணவகம் |
| 7 | அம்மாவின் கல்விப்புரட்சி |
| 8 | அம்மா குடிநீர் |
| 9 | கல்வித்தாய் |
| 10 | அம்மா திட்டம் |
| 11 | வரமாய் வந்தது அம்மாவின் ஆட்சி (பாடல்) |
| 12 | அம்மா உப்பு |
| 13 | அம்மா உப்பு (பாடல்) |
| 14 | மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த ஆணைகள் |
| 15 | சுதந்திரத் திருநாள் 2011 |



| வ. எண் | படக்காட்சி செய்தி மலர்கள் |
|---|---|
| 16 | எளியோர் ஏற்றம் பெற ஏற்றமிகு நிதிநிலை அறிக்கை |
| 17 | நாடு நலம் பெற நலத் திட்டங்கள் |
| 18 | தானே புயல் |
| 19 | பள்ளிக் கல்வியில் அம்மாவின் சொல்லிமாளாச் சாதனைகள் |
| 20 | மீனவர் நலன் காக்கும் மக்கள் அரசு |
| 21 | நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனை |
| 22 | உங்களால் நான் (சுதந்திர தினத் திருநாள் 2012) |
| 23 | டெங்குவை ஒழிப்போம் |
| 24 | டெங்குவை ஒழிப்போம் (பகுதி 2) |
| 25 | பென்னி குவிக் |
| 26 | ஒரு கையெழுத்து மாறியது தலையெழுத்து |
| 27 | அன்பின் அரசாங்கம் |
| 28 | சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு (பகுதி 1) |
| 29 | சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு (பகுதி 2) |
| 30 | சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு (குறும்பாடல்கள்) |
| 31 | விதி 110 (பகுதி 1 மற்றும் 2) |
| 32 | புதுமைகள் படைக்கும் புரட்சித்தலைவி |
| 33 | உயிர் காத்த உத்தமத் தலைவி |
| 34 | மாவட்ட ஆட்சியர் மாநாடு – 2013 |
| 35 | காவிரி நீரின் உரிமையைத் தமிழகத்துக்குப் பெற்றுத்தந்தது |

| வ. எண் | படக்காட்சி செய்தி மலர்கள் |
|---|---|
| 36 | விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் |
| 37 | காவிரி டெல்டா மேம்பாட்டுத் திட்டம் |
| 38 | முதல் தலைமுறை |
| 39 | விலையில்லாக் கறவை மாடு |
| 40 | சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் |
| 41 | அரசு கேபிள் டிவி சேவை மூலம் அதிகச் சேனல்களைக் குறைந்த கட்டணத்தில் வழங்குதல் |
| 42 | விலையில்லா அரிசி |
| 43 | ஒரு கிலோ அரிசி ரூ.20/– |
| 44 | தாய்ப்பாசம் |
| 45 | தாலிக்குத் தங்கம் |
| 46 | நடமாடும் மருத்துவமனைத் திட்டம் |
| 47 | உழவர் பெருவிழா |
| 48 | மாணவ – மாணவியர் காவலர் |
| 49 | பண்ணைப்பசுமை நுகர்வோர் மலிவு விலைக் காய்கறிக்கடை |
| 50 | தமிழ்நாடு அரசின் காவலர்களுக்கான புதிய குடியிருப்புகள் திட்டம் |
| 51 | இலவச நாப்கின் வழங்கும் திட்டம் |
| 52 | தொட்டில் குழந்தை திட்டம் |
| 53 | முதலமைச்சரின் பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டம் |
| 54 | வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு நிவாரணம் |
| 55 | விலையில்லா மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் |
| 56 | விலையில்லா மடிக்கணினி |



| வ. எண் | படக்காட்சி செய்தி மலர்கள் |
|---|---|
| 57 | ஜெருசலேம் தெய்வீகச் சுற்றுலா செல்லும் கிறிஸ்தவர்களுக்கு மானியம் |
| 58 | உழவர் பாதுகாப்புத் திட்டம் |
| 59 | விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் |
| 60 | அனைத்துத் திட்டங்களையும் முகாமில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு விரிவுபடுத்தியது |
| 61 | விதவை, திருமணம் ஆகாதவர்கள், ஓய்வூதியதாரரின் விதவை மகள், குடும்ப நலத்திட்டத்தின் கீழ் வாழ்நாள் ஓய்வூதியம் உயர்த்தி வழங்குதல் |
| 62 | சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை உயர்த்திய திட்டம் |
| 63 | விலையில்லா ஆடுகள் |
| 64 | தாய் திட்டம் |
| 65 | பள்ளி மாணவர்களுக்கான விலையில்லாப் பொருட்கள் வழங்கும் திட்டம் |
| 66 | மாற்றுத்திறனாளிக்கு Retro fitted Scooter வழங்கும் திட்டம் |
| 67 | மரக்கன்றுகள் நடுதல் |
| 68 | பள்ளி மாணவர்கள் பாதியில் பள்ளியை விட்டு நிற்காமல் இருக்கச் சிறப்புத் திட்டம் |
| 69 | மின் திட்டங்கள் |
| 70 | போக்குவரத்துத் துறை |
| 71 | அரசு தொலைநோக்குத் திட்டம் 2023 |
| 72 | மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்களுக்கு உதவித் தொகை உயர்த்தி வழங்கும் திட்டம் |
| 73 | அன்னதானத் திட்டம் |

| வ. எண் | படக்காட்சி செய்தி மலர்கள் |
|---|---|
| 74 | மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகிய இடங்களுக்குப் புனிதப் பயணத்திற்கு மானியம் |
| 75 | தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை மற்றும் சூரிய சக்தி திட்டங்கள் |
| 76 | பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டு மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்குதல் |
| 77 | ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் புனரமைப்புத் திட்டம் |
| 78 | விரைவு பட்டா மாற்றும் திட்டம் |
| 79 | மாற்றுத்திறனாளிகளுக்கான வயது வரம்பை 18 க்குக் குறைத்து ஓய்வூதியம் பெறுவதற்கான திட்டம் |
| 80 | சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகையை உயர்த்திய திட்டம் |
| 81 | சிறிய பேருந்து பெரிய மகிழ்ச்சி |
| 82 | மீன்பிடி குறைவு காலத்தில் மீனவர்களுக்குச் சிறப்பு நிவாரணம் உதவித் திட்டம் |
| 83 | அயல்நாட்டில் உயர்கல்வி படிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் |
| 84 | முத்திரை பதித்த மூன்றாண்டு (பகுதி 1) |
| 85 | முத்திரை பதித்த மூன்றாண்டு (பகுதி 2) |
| 86 | ஆண்டாண்டு போற்றும் மூன்றாண்டு சாதனைகள் |
| 87 | இமயம் தொட்ட சாதனைகள் (பாடல்) |
| 88 | தாயே அன்னபூரணி மற்றும் தொழில் புரட்சி |
| 89 | மாற்றம் தந்து ஏற்றம் தந்த புரட்சித்தலைவி |
| 90 | பயணங்கள் இனிதாகும் பேருந்துப் பயணம் |



| வ. எண் | படக்காட்சி செய்தி மலர்கள் |
|---|---|
| 91 | பண்ணைப் பசுமைக் காய்கறிகள் |
| 92 | குறுவை நெல் சாகுபடி |
| 93 | அணை காத்த அன்னை |
| 94 | வளமையான தமிழகம் |
| 95 | விவசாயிகளின் நலன் |
| 96 | குழந்தைகள் நலன் |
| 97 | தாய் திட்டம், காவல் துறை |
| 98 | மகளிர் மேம்பாடு |
| 99 | விலையில்லா மடிக்கணினி, அம்மா உணவகம் |
| 100 | ஊட்டச்சத்து |
| 101 | அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட் |
| 102 | ஆதிதிராவிடர் நலன் (ம) பிற்படுத்தப்பட்டோர் நலன் |
| 103 | திருமண உதவித் திட்டம், 20 கிலோ அரிசி |
| 104 | சானிடரி நாப்கின், விலையில்லா மிதிவண்டி |
| 105 | திருக்கோயில் அன்னதானத் திட்டம், மானசரோவர் முக்திநாத் புனிதப் பயண மானியத் திட்டம் |
| 106 | பண்ணைப் பசுமை, அம்மா மருந்தகம் |
| 107 | மழைநீர் சேகரிப்பு, காடு வளர்ப்போம் |
| 108 | மீனவர்கள் நலன், முதியோர் உதவித்தொகை |
| 109 | விரிவான மருத்துவப் பாதுகாப்புத் திட்டம், தொழில்துறை – 2023 |
| 110 | மகப்பேறு நலன் |
| 111 | விலையில்லா மாடு, நான்கு ஆடுகள் |
| 112 | விவசாயிகளின் வாழ்வாதாரம் முல்லைப்பெரியாறு, காவேரியை மீட்டெடுத்த காவியத்தலைவி |

| வ. எண் | படக்காட்சி செய்தி மலர்கள் |
|---|---|
| 113 | தொட்டில் குழந்தைத் திட்டம், அம்மா பேர் தலைப்பெழுத்து |
| 114 | விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி, அம்மா உப்பு |
| 115 | தர்மம் வெல்லும் |
| 116 | பிளாஸ்டிக் ஆதார் அட்டை |
| 117 | இ–சேவையில் இனி பாஸ்போர்ட் |
| 118 | சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி–1 |
| 119 | சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி–2 |
| 120 | சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி–3 |
| 121 | சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி–4 |
| 122 | சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி–5 |
| 123 | சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி–6 |
| 124 | 110 விதியின்கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிக்கை |
| 125 | தொடரும் அம்மாவின் ஆட்சி, தொடர்கிறது மக்களின் மகிழ்ச்சி |
| 126 | 100 யூனிட் இலவச மின்சாரம் |
| 127 | சரித்திரம் படைக்கும் 100 நாள் |
| 128 | உயிர்தான் உங்கள் சொத்து (ஹெல்மட் அணிவதன் கட்டாயம்) |



| வ. எண் | படக்காட்சி செய்தி மலர்கள் |
|---|---|
| 129 | மயக்கமா ? கலக்கமா ? (மது அருந்தி வாகனம் ஓட்டுவது) |
| 130 | நில் கவனி செல் (சாலை விதிகளை மதித்தல்) |
| 131 | சாலை விதிகள் நமக்காக (நிதானம் நம்மோடு பயணிக்கட்டும்) (அதிவேகமாக வாகனம் செலுத்துவது) |
| 132 | ஹெல்மட் அணிவோம் எமனை வெல்வோம் (ஹெல்மட் அணிவதன் கட்டாயம்) |
| 133 | சீட் பெல்ட் (விதியை மதிப்போம் விதியை வெல்வோம்) |
| 134 | அம்மா என்றும் எங்களுடன் (பாடல்) |
| 135 | இறுதி யாத்திரை |
| 136 | லோக் அதாலத் |
| 137 | அகிலம் போற்றும் ஐந்து திட்டங்கள் |
| 138 | நல்ல காலம் பொறந்தாச்சு |

**குறும்பாடல்கள்**

| வ. எண் | குறும்பாடல்கள் |
|---|---|
| 1 | **வளர்ச்சிப் பாதையில் மீண்டும் தமிழ்நாடு தொகுப்பு 1**<br>1. விலையில்லா அரிசி<br>2. மாற்றுத்திறனாளி, விதவை, ஆதரவற்றோர் உதவித்தொகை<br>3. பெண் அரசு ஊழியர் மகப்பேறு காலம் 6 மாத விடுமுறை<br>4. மீனவர் மீன்பிடி தடைக்கால உதவித்தொகை<br>5. படித்த பெண்களுக்கு நிதியுதவியுடன் 4 கிராம் தங்கம்<br>6. பட்டம் படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்கம், ரூ.50 ஆயிரம் நிதியுதவி |

| வ. எண் | குறும்பாடல்கள் |
|---|---|
| 2 | **தொகுப்பு 2**<br>1. விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்<br>2. விலையில்லா 4 ஆடுகள், கறவைமாடு திட்டம்<br>3. விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்<br>4. விலையில்லா மடிக்கணினி<br>5. சித்திரைத் திருநாள் |
| 3 | நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனை |
| 4 | **ஒரு கையெழுத்து, மாறியது தலையெழுத்து**<br>1. விலையில்லாப் பசு மாடுகள், செம்மறி ஆடுகள்<br>2. விலையில்லா மடிக்கணினி<br>3. விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்<br>4. பசுமை வீடுகள் திட்டம்<br>5. தாலிக்குத் தங்கம் மற்றும் ரொக்கம்<br>6. மீன்பிடி தடைக் காலத்தில் உதவித் தொகை உயர்வு<br>7. விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை உயர்வு<br>8. விலையில்லா 20 கிலோ அரிசி<br>9. கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறுகால உதவித் தொகை உயர்வு<br>10. விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் |



| வ. எண் | குறும்பாடல்கள் |
|---|---|
| 5 | **சாதனை படைத்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு**<br>1. காவிரியை மீட்டெடுத்த காவியத் தலைவி<br>2. பள்ளிக் கல்வி<br>3. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்<br>4. போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி<br>5. அம்மா உணவகம் பகுதி – 1<br>6. உழவர் பாதுகாப்புத் திட்டம்<br>7. அம்மா உணவகம் பகுதி – 2<br>8. பாலங்கள்<br>9. நிருவாகம்<br>10. தொழில்புரட்சி<br>11. தொலைநோக்குத் திட்டம் – 2023<br>12. சோலார் சிஸ்டம்<br>13. மலிவு விலை அரிசி |
| 6 | **நாடு போற்றும் நான்காண்டு சாதனைகள்**<br>1. அம்மாவின் முதல் எழுத்து தலைப்பெழுத்து<br>2. அம்மா குடிநீர்<br>3. அம்மா மருந்தகம்<br>4. அம்மா சிமெண்ட்<br>5. அம்மா சிற்றுந்து<br>6. தொட்டில் குழந்தைத் திட்டம்<br>7. காடு வளர்ப்புத் திட்டம்<br>8. காற்றாலை மின்சாரத் திட்டம்<br>9. பண்ணைப் பசுமைக் கடைகள்<br>10. மழைநீர் சேகரிப்பு |

| வ. எண் | குறும்பாடல்கள் |
|---|---|
| 7 | **புதிய அரசு பதவியேற்று 100 நாள் சாதனைகள்**<br>1. மக்கள் பணியில் தமிழக அரசின் 100 நாள் சாதனைகள்<br>2. குடிமராமத்துப் பணிகள்<br>3. மீனவர்களுக்கு வீடு<br>4. பாரத் – ஃபைப்பர் நெட்<br>5. மெட்ரோ ரயில் |

**2011 முதல் 2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் அதிநவீன உபகரணங்கள் கொள்முதல்**

கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.83.57 இலட்சம் மதிப்பீட்டில் 3 நவீனக் கேமிராக்கள், மடிக்கணினி, ஒரு நேரடி ஒளிபரப்புக் கருவி, உயர்ரக வீடியோ காமிரா, ஓர் ஆப்பிள் மேக்புரோ நான் லீனியர் வீடியோ எடிட்டிங் சிஸ்டம், ஒரு நகலெடுக்கும் கருவி, இரண்டு கணினி, பிரிண்டர்கள் போன்ற துணைக்கருவிகள் வாங்கப்பட்டுள்ளன மற்றும் படச்சுருள்கள் மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளன.



# எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் சென்னை தரமணியில் இயங்கி வரும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் திரைப்படத் தயாரிப்பு மற்றும் தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்களையும் கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது. பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப்பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத்தருவதே இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் அகில இந்திய அளவில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சியை அளிக்கும் மூன்று முன்னோடி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. பூனாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும் கொல்கத்தாவில் உள்ள சத்தியஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் மற்ற நிறுவனங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

## பட்டப் படிப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு அங்கீகாரத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்த பட்டயப் படிப்புகள் தற்பொழுது இளங்கலைக் காட்சிக்கலை நான்காண்டு பட்டப்படிப்புகளாக மாற்றப்பட்டு, **2016–2017** ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து **6** பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இந்த பட்டப்படிப்புகளில் சேர கீழ்க்கண்ட அடிப்படைக் கல்வித்தகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>பாடப்பிரிவு விவரம்</th><th>கல்வித் தகுதி</th></tr>
<tr><td>1</td><td>இளங்கலைக் காட்சிக்கலை (ஒளிப்பதிவு)</td><td rowspan="2">மேல்நிலை (10+2) கல்வித் தேர்ச்சி<br>(இயற்பியல் மற்றும் வேதியியல்)<br>(அ)<br>சிறப்புப் பாடமாக புகைப்படம் சார்ந்த தொழில் படிப்புகள்<br>(அ)<br>அதற்கு இணையான படிப்புகள்<br>(அ)<br>மின்னியல் மற்றும் மின்னணுவியல்<br>(அ)<br>மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் ஆகிய பட்டயப் படிப்புகளில் தேர்ச்சி</td></tr>
<tr><td>2</td><td>இளங்கலைக் காட்சிக்கலை (எண்மிய இடைநிலை)</td></tr>
</table>



<table>
<tr><th>வ. எண்</th><th>பாடப்பிரிவு விவரம்</th><th>கல்வித் தகுதி</th></tr>
<tr><td>3</td><td>இளங்கலைக் காட்சிக்கலை (ஒலிப்பதிவு)</td><td>மேல்நிலை (10+2) கல்வித் தேர்ச்சி<br>( இயற்பியல் மற்றும் வேதியியல்)<br>(அ)<br>சிறப்புப் பாடமாக வானொலி அல்லது தொலைக்காட்சி<br>(அ)<br>உள்நாட்டு மின்னணு உபகரணங்கள் சார்ந்த தொழில் படிப்புகள்<br>(அ)<br>அதற்கு இணையான படிப்புகள்<br>(அ)<br>மின்னியல் மற்றும் மின்னணுவியல்<br>(அ)<br>மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் ஆகிய பட்டயப் படிப்புகளில் தேர்ச்சி</td></tr>
<tr><td>4</td><td>இளங்கலைக் காட்சிக்கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்)</td><td rowspan="3">மேல்நிலை (10+2) கல்வியில் ஏதேனும் ஒரு பிரிவில் தேர்ச்சி</td></tr>
<tr><td>5</td><td>இளங்கலைக் காட்சிக்கலை (படத்தொகுப்பு)</td></tr>
<tr><td>6</td><td>இளங்கலைக் காட்சிக்கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் )</td></tr>
</table>

இதுவரை வழங்கப்பட்ட திரைப்படத் தொழில்நுட்பத்தில் பட்டயம் என்ற பட்டயத்திற்குப் பதிலாக இளங்கலை காட்சிக்கலை என்ற பட்டம் வழங்கப்படவுள்ளது.

மேற்கண்ட ஒவ்வொரு பிரிவிலும் 14 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆண்டொன்றுக்கு கல்விக் கட்டணமாக ரூ.15,000/–மும், சிறப்புக் கட்டணமாக ரூ.2,000/–மும், வளர்ச்சிக் கட்டணமாக ரூ.1,000/–மும் வசூலிக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் முற்றிலுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி

2011–2012ஆம் நிதியாண்டு முதல் பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவிற்காக ஒரு மாணவருக்கு ஒரு பட்டயப் படம் தயாரிக்க அளிக்கப்படும் நிதியுதவி ரூ.8,000/– லிருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தித் தமிழக அரசால் ஆண்டொன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கல்வி இறுதியாண்டில், அனைத்துத் துறைகளிலும் பயிலும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டயக் குறும்படம் வீதம் 14 பட்டயப் படங்கள் தயாரிக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## குறும்பட விருது

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின்



சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் பட ஆக்கம்– அச்சிடல் வல்லுநர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குக் ‘‘குறும்பட விருது’’ வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவர்களுக்கு முறையே ஒரு பவுன் தங்கப்பதக்கம், ரூ.5,000/– பரிசு மற்றும் நினைவுக் கேடயமும் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

## அகில இந்திய சர்வதேச திரைப்பட விழா

கோவாவில் ஆண்டுதோறும் நடைபெறும் அகில இந்திய திரைப்பட விழாவில் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் பட்டயக் குறும்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன.

## பிரிக்ஸ் திரைப்பட விழா

2016ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்ற பிரிக்ஸ் திரைப்பட விழாவில், இந்நிறுவன மாணவர்களின் குறும்படங்களான ‘‘ராணி’’, ‘‘கனா’’, ‘‘தி லாஸ்ட் லீப்’’ மற்றும் ‘‘ஷீப்ஸ் வேனீஷ்ட் இன் தி ஹேர்ட்’’ ஆகியன திரையிடப்பட்டன.

## அம்மா விருது

ஆண்டுதோறும் ‘‘சென்னை சர்வதேச திரைப்பட விழா’’வில் பங்கேற்கும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் குறும்படங்களுக்கு ‘‘ அம்மா விருது’’ மற்றும் ரூ.10,000/–ம் ரொக்கப்பரிசும் வழங்கப்பட்டு வருகின்றன.

சென்னை சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்று அம்மா விருது பெற்ற குறும்படங்களின் விவரம்:

| வ. எண் | விழா | ஆண்டு | குறும்படத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 12வது சர்வதேச திரைப்பட விழா | 2014–15 | “ச்சீ” |
| 2 | 13வது சர்வதேச திரைப்பட விழா | 2015–16 | “புர்ர்ரா” |
| 3 | 14வது சர்வதேச திரைப்பட விழா | 2016–17 | “உத்தமன்” |

**மாணவர்களுக்கு நவீனத் தொழில்நுட்பத்தில் பயிற்சி**

தமிழ்நாடு அரசின் சார்பில் மாணவர்களின் பட்டயக் குறும்படங்களுக்காகவும் செயல்முறைப் பயிற்சிக்காகவும் இன்றைய வளர்ந்து வரும் தொழில்நுட்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும் திரைத்துறைக்கு இணையாக நவீனத் தொழில்நுட்பக் கருவிகளை ஆண்டுதோறும் வாடகை அடிப்படையில் எடுத்து இந்நிறுவன மாணவர்களுக்கு ரூ.75 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பாடத்திட்டம்**

இந்நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் திரைப்படத் துறையில் நவீனத் தொழில்நுட்பத்திற்கேற்பச் சிறந்த முறையில் விளங்கிட ரூ.3.83 கோடி மதிப்பீட்டில், 2015–2016ஆம் கல்வியாண்டில் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பாடப்பிரிவிற்காக நவீனக் கருவிகள் மற்றும்



துணைக்கருவிகள் வாங்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளன.

**2011 முதல் 2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் புதிய கட்டடம், புனரமைப்புப் பணிகள், அதிநவீனக் கருவிகள்**

கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.10.95 கோடி மதிப்பீட்டில் ரிச்மேன் ஹவுஸ், டப்பிங் தியேட்டர், முன்காண் திரையரங்கம் புனரமைத்தல், பொன்விழா முகப்பு வளைவு மற்றும் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவு சிலை, உயிர்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பாடப்பிரிவிற்குப் புதிய வகுப்பறைகள், புதிதாகக் கட்டப்பட்ட மாணவர் விடுதி மற்றும் அறைகலன்கள், முன்காண் திரையரங்கம், நவீன உயர்தர டிஜிட்டல் டால்பி பார்கோ புரொஜெக்டர் மற்றும் நவீன ஒலி அமைப்புடன் புதுப்பித்தல் மற்றும் அதிநவீனக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

# திரைப்படம், காணொளி (வீடியோ) மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

திரைப்படம் என்பது அனைத்துத் தரப்பு மக்களிடம் பொதுவாக வழக்கத்திலுள்ள எளிதாகச் செல்லக்கூடிய பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாகத் திகழ்வதால் திரைப்படத் துறையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு அரசு இத்துறையை ஊக்குவித்து வருகிறது.

தமிழ்நாட்டில், தற்போது 1,024 திரையரங்குகள் கீழ்க்கண்டுள்ள இனங்களின்படி இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 997 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 19 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 05 |
| 4. | திறந்தவெளித் திரையரங்குகள் | 03 |
| | மொத்தம் | 1,024 |

திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதை முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டப் பிரிவுகளின்படி, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை காவல் துறை ஆணையரும், திரையரங்குகளை அமைப்பதற்குத் தடையின்மை சான்றும், திரைப்படங்களைத் திரையிடுவதற்கு உரிமம் வழங்கும்



தகுதியுடைய அதிகாரிகள் ஆவர். இணை ஆணையர், நில நிருவாக ஆணையரகம் மற்றும் அரசு (உள்துறை) ஆகியோர் முறையே மேல் முறையீட்டு அதிகாரியாகவும், சீராய்வு மேற்கொள்ளும் அதிகார அமைப்பாக செயல்பட இச்சட்டப்பிரிவுகளின்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. திரைப்படத் துறையை ஒழுங்குபடுத்தவும், திரையரங்குகளில் திரைப்படம் காண வரும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள், சுகாதாரமான சூழல், பாதுகாப்பு மற்றும் பிற நல அம்சங்கள் வழங்க உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள் 1957–இல் அரசு கடுமையான வழிமுறைகளை வகுத்துள்ளது. மேலும் இந்த விதிகளின் கீழ் அரசு பார்வையாளர்களின் அனுமதி கட்டணத்தை நிர்ணயிக்கிறது.

## கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு

இந்தியா முழுவதும் உள்ள கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பினை 1995–ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்புச் (முறைப்படுத்துதல்) சட்டம் (மத்தியச் சட்டம் 7/1995) முறைப்படுத்துகிறது. மேற்சொல்லப்பட்ட சட்டத்தின்படி, மாவட்ட மற்றும் உட்கோட்ட மாஜிஸ்திரேட்டுகள் மற்றும் மாநகர காவல் துறை ஆணையாளர் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8 மற்றும் 9 (அல்லது) 10 ஆகிய பிரிவுகளை மீறும், கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தமிழக அரசு சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில்

ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் உள்ள நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமித்து, அறிவிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டத்தினை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாநகரக் காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## காணொளி (வீடியோ) சட்டமும் விதிகளும்

1984–ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொளிப் (வீடியோ கேசட்) பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில், திரைப்படங்களை காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், தமிழ்நாட்டில் காணொளிப் (வீடியோ கேசட்) பதிவு கருவிகளை பயன்படுத்தி திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் காணொளிப் (வீடியோ கேசட்) பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், காணொளி (வீடியோ) நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அதிகாரிகள்.



## காணொளி (வீடியோ) திருட்டு தடுப்புப் பிரிவு

காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடி கட்டுப்பாட்டின் கீழ், குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு இயங்கி வருகிறது. காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநருக்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அளவில் ஒரு காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஒரு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் தற்போது சென்னை (2), புனித தோமையார் மலை (1), வேலூர் (1), சேலம் (1), கோயம்புத்தூர் (1), திருச்சி (1), கடலூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), விருதுநகர் (1) மற்றும் திருநெல்வேலி (1) ஆகிய பன்னிரண்டு இடங்களில் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு அலகும், ஒரு காவல் ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் ஆறு முதல் நிலை காவலர்களை உள்ளடக்கியதாகும். சென்னையைப் பொறுத்த வரை இரண்டு அலகுகள் இயங்கி வருகின்றன. அதில் அலகு 1–இல் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், எட்டு முதல் நிலை காவலர்கள் மற்றும் இரண்டு இரண்டாம் நிலை காவலர்கள் உள்ளனர். அலகு 2–இல் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், மற்றும் எட்டு முதல் நிலை காவலர்கள் உள்ளனர். 1957–ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம் மற்றும் 2000–ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்க இப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. வீடியோ திருட்டு தடுப்பு பிரிவினால் 2004–ஆம் ஆண்டு முதல் 2017–ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட

வழக்குகளின் எண்ணிக்கை, அவ்வழக்குகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு முதலிய விவரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன :–

**திருட்டு காணொளி (வீடியோ) தடுப்பு பிரிவால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த விபரம் 2004 முதல் 2017 வரை (31.05.2017 வரை)**

| வருடம் | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூ) | கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2004 | 1151 | 1206 | 12,06,43,647 | 53 |
| 2005 | 813 | 950 | 9,44,55,557 | 13 |
| 2006 | 1153 | 1193 | 19,00,04,502 | 10 |
| 2007 | 1844 | 1866 | 17,38,74,360 | 9 |
| 2008 | 1968 | 1955 | 1,72,23,401 | 17 |
| 2009 | 2204 | 2201 | 8,32,59,759 | 31 |
| 2010 | 2690 | 2664 | 14,38,31,530 | 34 |
| 2011 | 2665 | 2648 | 10,78,74,745 | 9 |
| 2012 | 2858 | 2838 | 14,36,05,175 | 2 |
| 2013 | 3020 | 3004 | 36,57,57,107 | 2 |
| 2014 | 3320 | 3320 | 17,75,02,306 | 29 |
| 2015 | 3406 | 3406 | 11,65,23,631 | 51 |
| 2016 | 4893 | 4906 | 26,14,13,385 | 21 |
| 2017 (31.5.17 வரை) | 2390 | 2401 | 23,66,12,159 | 10 |



இது தவிர, காணொளி (வீடியோ) திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982) கீழும் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. வீடியோ திருட்டு சம்பந்தமான குற்றங்களுக்காக, 2016–2017–ஆம் ஆண்டில் 7 நபர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## தமிழரசு

தமிழ்நாடு அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே கொண்டு சேர்க்கும் அரசின் அச்சு ஊடகமாகத் 'தமிழரசு' இதழ் திகழ்கிறது.

'தமிழரசு' இதழில் அரசின் சாதனைகள், மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரைத் தொகுப்புகள் மற்றும் அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள் மற்றும் அறிவிப்புகள், தமிழக அரசின் சாதனைகள், மக்கள் நலத் திட்டங்களின் செயல்பாடுகள், அரசு நலத்திட்ட உதவிகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், தமிழகம் முழுவதிலும் உள்ள நலத்திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகளின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வெற்றிக் கதைகள், பொதுமக்களுக்குப் பயனளிக்கும் முக்கிய அரசாணைகள் உள்ளிட்டவை வெளியிடப்படுகின்றன.

மேலும், மகளிர் நலம், குடும்பநலம், மருத்துவம், இரத்ததானம், எய்ட்ஸ் விழிப்புணர்வு உள்ளிட்ட சமூக நலம் சார்ந்த அரசின் திட்டங்களை விளக்கிடும் கட்டுரைகள், தமிழ் இலக்கிய வளத்தை உணர்த்தும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றுடன் அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களையும் தாங்கித் தமிழரசு இதழ், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் திங்கள் தோறும் வெளியிடப்படுகின்றது.



காலாண்டு இதழாக வெளிவந்த தமிழரசு ஆங்கில இதழ், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஜூலை 2012 முதல் மாத இதழாக வெளியிடப்பட்டு வருகிறது.

'தமிழரசு' இதழ்கள் தமிழ் மற்றும் ஆங்கில மாத இதழ்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ் மற்றும் ஆங்கிலம் இதழ்களின் விலை முறையே ரூ.20/– ஆகவும், ஆண்டுச் சந்தா முறையே ரூ.240/– ஆகவும், ஆயுள் சந்தா தமிழ் (10 ஆண்டுகளுக்கு) ரூ.2,000/– ஆகவும் மற்றும் ஆயுள் சந்தா ஆங்கிலம் (10 ஆண்டுகளுக்கு) ரூ.2,400/– ஆகவும் நிருணயிக்கப்பட்டுள்ளது.

### சிறப்பு வெளியீடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கிய நிகழ்ச்சிகளில் ஆற்றிய தமிழ் மற்றும் ஆங்கில உரைகள் அடங்கிய சிறப்பு வெளியீடுகள் அவ்வப்பொழுது வெளியிடப்பட்டு மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலமாக மக்களுக்கு வழங்கப்படுகின்றன. தமிழரசு இதழ்கள் மட்டுமல்லாமல் தலைவர்கள், தியாகிகள் மற்றும் சான்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள், சிறப்புக் கையேடுகள், தொலைபேசி சிறு கையேடு, அரசு விழா அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் ஆகியவையும் அழகிய முறையில் வடிவமைத்து, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்றவையும் இங்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

**சாதனை மலர்கள்**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் 100 நாள் சாதனைகளைத் துறைவாரியாகத் தொகுத்து **"மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைகள்"** என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

மேலும், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் **ஓராண்டு சாதனை மலர்:** "நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனைகள்" **ஈராண்டு சாதனை மலர்:** "சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு" **மூன்றாண்டு சாதனை மலர்:** "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் மூன்றாண்டு சாதனைகள்" **நான்காண்டு சாதனை மலர்:** "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் நான்காண்டு சாதனைகள்" **ஐந்தாண்டு சாதனை மலர் :** "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் சாதனைகள் (16.05.2011 – 31.01.2016)" சாதனை மலர்களாக வெளியிடப்பட்டன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் 100 நாள் சாதனைகளைத் துறைவாரியாகத் தொகுத்து **"நிலையான ஆட்சி நிரந்தர வளர்ச்சி"** என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.



**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழியில் நிலையான ஆட்சி – நிரந்தர வளர்ச்சி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் தலைமையிலான அரசின் 100 நாள் சாதனைகளைத் துறைவாரியாகத் தொகுத்துச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

**மடிப்பேடுகள்**

"தமிழரசு" சார்பில் 2011 மே முதல் தற்பொழுது வரை பல்வேறு தலைவர்கள், தியாகிகளின் வாழ்க்கை வரலாறுகள் மடிப்பேடுகளாக அச்சடிக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1. தந்தை பெரியார்
2. பேரறிஞர் அண்ணா
3. பெருந்தலைவர் காமராசர்
4. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்.
5. மகாகவி சுப்பிரமணிய பாரதியார்
6. கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில்
7. தியாகச் செம்மல் வ.உ. சிதம்பரனார்
8. வீரன் சுந்தரலிங்கம்
9. சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துக்கோன்
10. விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன்
11. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயண கவி
12. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம்
13. சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் குமரன்

14. விருப்பாட்சி கோபால் நாயக்கர்
15. தியாகி வ.வே. சுப்பிரமணிய அய்யர்
16. தியாகி ஆர்யா (எ) பாஷ்யம்
17. மார்ஷல் நேசமணி
18. முன்னாள் மேயர் என். சிவராஜ்
19. தமிழுக்குப் பெருமை சேர்த்த பரிதிமாற் கலைஞர்
20. தீரன் சின்னமலை
21. தியாக சீலர் கக்கன்
22. தியாகி சங்கரலிங்கனார்
23. தியாகி விஸ்வநாததாஸ்
24. அமுதகவியரசு உமறுப்புலவர்
25. கவியரசு கண்ணதாசன்
26. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை
27. மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
28. சதாவதானி செய்குதம்பி பாவலர்
29. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்
30. தவத்திரு குன்றக்குடி அடிகளார்
31. பட்டுக்கோட்டை அழகிரிசாமி
32. மாமன்னர் பெரும்பிடுகு முத்தரையர்
33. பேராயர் ராபர்ட் கால்டுவெல்
34. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆறாவது முறையாகப் பதவியேற்றவுடன் முதலில் கையொப்பமிட்ட ஐந்து திட்டங்கள்



**சிறப்பு வெளியீடுகள்**

| **வ. எண்** | **தலைப்பு** | **வெளியிடப்பட்ட மாதம்** |
|---|---|---|
| 1 | சட்டப்பேரவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரை – 10.6.2011. | ஜுன் 2011 |
| 2 | 5.7.2011ல் நடைபெற்ற **தேசிய வளர்ச்சிக்குழுக்** கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புரட்சித்தலைவி அம்மா ஆற்றிய உரை (ஆங்கிலம்) | ஜுலை 2011 |
| 3 | சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரை– 4.2.2012 | பிப்ரவரி 2012 |
| 4 | 22.3.2012 இல் சென்னையில் நடைபெற்ற **"தொலைநோக்குப்பார்வை தமிழ்நாடு 2023"** வெளியீட்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமை உரை (ஆங்கிலம்) | மார்ச் 2012 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 5 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எழுச்சிமிகு உரைகள்**<br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு – 1 (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு)<br>(தமிழ் மற்றும் ஆங்கிலம்) | மே 2012 |
| 6 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எழுச்சிமிகு உரைகள்**<br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு – 2 (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு) | மே 2012 |
| 7 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நலத் திட்டங்கள்** பயன் பெற்றோரின் **வெற்றிக் கதைகள்** (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு) | மே 2012 |
| 8 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அமுத மொழிகள்**<br>(ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு) | மே 2012 |



| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 9 | புது டெல்லியில் 4.6.2012 **மத்திய திட்டக்குழு துணைத் தலைவரின் தமிழ்நாட்டிற்கான ஆண்டுத் திட்டம்** இறுதி செய்யும் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சிறப்புரை (ஆங்கிலம்) | ஜுன் 2012 |
| 10 | புது டெல்லியில் 19.9.2012இல் நடைபெற்ற **காவிரி நதிநீர் ஆணையத்தின் ஏழாவது கூட்டத்தில்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உரை (ஆங்கிலம்) | செப்டம்பர் 2012 |
| 11 | **5.11.2012** இல் சென்னையில் நடைபெற்ற தமிழகத்தில் தொழில் முதலீட்டிற்கான 12 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உரை (ஆங்கிலம்) | நவம்பர் 2012 |
| 12 | **காவிரி நதி நீர் பங்கீடு** – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உரைகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | டிசம்பர் 2012 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 13 | **விதியை மாற்றிய விதி** – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு – 1 | டிசம்பர் 2012 |
| 14 | மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரைகள் – 17,18 மற்றும் 19 டிசம்பர் 2012 (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | டிசம்பர் 2012 |
| 15 | புது டெல்லியில் 27.12.2012இல் **57–வது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உரை (ஆங்கிலம்) | டிசம்பர் 2012 |
| 16 | சட்டப் பேரவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரை (8.2.2013) | பிப்ரவரி 2013 |



| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 17 | **கச்சத்தீவை மீட்போம் – 3.5.2013** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரை | மே 2013 |
| 18 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–3 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2013 |
| 19 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–4 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2013 |
| 20 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–2 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2013 |
| 21 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உரைகளில் மலர்ந்த **முத்தான கதைகள்** (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2013 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 22 | **விதியை மாற்றிய விதி**–தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு–2 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2013 |
| 23 | புது டெல்லியில் 5.6.2013 அன்று நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்த முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உரை (ஆங்கிலம்) | ஜூன் 2013 |
| 24 | புதுடெல்லியில் 10.6.2013 அன்று தமிழ்நாட்டுக்கான 2013–2014ஆம் ஆண்டின் ஆண்டுத் திட்டத்தை இறுதி செய்வதற்கான மத்திய திட்டக் குழுவின் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்) | ஜூன் 2013 |
| 25 | தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு **என்.எல்.சி.யின் பங்குகள்!** தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்த வெற்றி!! | ஜூலை 2013 |



| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 26 | சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில் 17.8.2013 அன்று நடைபெற்ற, சென்னைப் பல்கலைக்கழகத்தின் **155 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்) | ஆகஸ்ட் 2013 |
| 27 | சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில் 20.8.2013 அன்று நடைபெற்ற தமிழ்நாடு **டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வெள்ளி விழாவில்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்) | ஆகஸ்ட் 2013 |
| 28 | **மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரைகள் 11,12 மற்றும் 13 டிசம்பர் 2013 (ஆங்கிலம்) | டிசம்பர் 2013 |
| 29 | சென்னையில் 16.12.2013 அன்று நடைபெற்ற **14–வது நிதிக்குழு ஆய்வுக் கூட்டத்தில்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரைத்தொகுப்பு | டிசம்பர் 2013 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 30 | சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் 27.1.2014 அன்று நடைபெற்ற 4–வது அகில இந்திய காவல் அதிரடிப்படையினர் திறன் போட்டி நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை (ஆங்கிலம்) | ஜனவரி 2014 |
| 31 | **எங்கள் பக்கம் மக்கள்; மக்களின் பக்கம் நாங்கள்** – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3.2.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதிலுரை | பிப்ரவரி 2014 |
| 32 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–5 (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2014 |
| 33 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எழுச்சிமிகு உரைகள்– தொகுப்பு–6 (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2014 |



| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| 34 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எழுச்சிமிகு உரைகள் – தொகுப்பு–3 (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2014 |
| 35 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அமுத மொழிகள் (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2014 |
| 36 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய நேர்முகக் கடிதங்களின் தொகுப்பு (2011–2014) (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2014 |
| 37 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களிடம் அளித்த கோரிக்கை மனு 3.6.2014 (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | ஜூன் 2014 |
| 38 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் மூன்றாண்டு சாதனைகள் (32 மாவட்டங்களின் சாதனைகள் மாவட்டங்கள் வாரியாகத் தனித்தனிப் புத்தகங்களாக வெளியிடப்பட்டன). | ஜூலை 2014 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **39** | அரசு நலத்திட்ட உதவிகள் (தகவல் கையேடு) | ஜுலை 2014 |
| **40** | **விதியை மாற்றிய விதி** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 8.6.2011 முதல் 12.8.2014 வரை வெளியிட்ட அறிவிப்புகள் | செப்டம்பர் 2014 |
| **41** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எழுச்சிமிகு உரைகள் (2011–2012) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **42** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எழுச்சிமிகு உரைகள் (2012–2013) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **43** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எழுச்சிமிகு உரைகள் (2013–2014) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |



| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **44** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எழுச்சிமிகு உரைகள் – (2011–2014) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2015 |
| **45** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய நேர்முகக் கடிதங்களின் தொகுப்பு (2011–2015) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2015 |
| **46** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள் (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **47** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அமுத மொழிகள் (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **48** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நலத்திட்டப் பயனாளிகளின் வெற்றிக்கதைகள் (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **49** | Awards and Accolades for Tamil Nadu Government (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2015 |
| **50** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் நான்காண்டு சாதனைகள் (32 மாவட்டங்களின் சாதனைகள் மாவட்டங்கள் வாரியாகத் தனித்தனிப் புத்தகங்களாக வெளியிடப்பட்டன) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) | மே 2015 |
| **51** | Tamil Nadu in the Forefront (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்) | மே 2015 |
| **52** | **விதியை மாற்றிய விதி** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 8.6.2011 முதல் 29.9.2015 வரை வெளியிட்ட அறிவிப்புகள் | நவம்பர் 2015 |
| **53** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் சாதனைகள் (16.5.2011–31.1.2016) | பிப்ரவரி 2016 |



| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **54** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசின் சாதனைகள் (16.5.2011–31.1.2016) (ஆங்கிலம்) | பிப்ரவரி 2016 |
| **55** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களிடம் அளித்த கோரிக்கை மனு – 14.6.2016 (ஆங்கிலம்) | ஜூன் 2016 |
| **56** | தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரை (23.6.2016) | ஜூன் 2016 |
| **57** | **விதியை மாற்றிய விதி** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 18.02.2016 முதல் 01.09.2016 வரை வெளியிட்ட அறிவிப்புகள் | செப்டம்பர் 2016 |
| 58 | நிலையான ஆட்சி – நிரந்தர வளர்ச்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையில் 100 நாள் சாதனைகள் | செப்டம்பர் 2016 |

| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **59** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களிடம் அளித்த கோரிக்கை மனு – 19.12.2016 (ஆங்கிலம்) | ஜனவரி 2017 |
| **60** | அரசு நலத்திட்ட உதவிகள் – தகவல் கையேடு (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | பிப்ரவரி 2017 |
| **61** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களிடம் அளித்த கோரிக்கை மனு – 27.02.2017 (ஆங்கிலம்) | மார்ச் 2017 |
| **62** | தமிழக மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கோரி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு. (ஆங்கிலம்) | மார்ச் 2017 |
| **63** | மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நிலையான ஆட்சி – நிரந்தர வளர்ச்சி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசின் 100 நாள் சாதனைகள் | மே 2017 |



| வ. எண் | தலைப்பு | வெளியிடப்பட்ட மாதம் |
|---|---|---|
| **64** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஆற்றிய எழுச்சிமிகு உரைகள் (16.2.2017 – 19.05.2017) | மே 2017 |

**2011 முதல் 2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் புதிய கட்டடம் மற்றும் அதிநவீன இயந்திரங்கள் கொள்முதல்**

கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.11.25 கோடி மதிப்பீட்டில், தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சகத்திற்குத் தரமணியில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது; அதிநவீன இயந்திரமான ‘‘கணினியிலிருந்து அச்சுத்தட்டு இயந்திரம்’’ மற்றும் ‘‘நான்கு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம்’’ கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் 1991–1996, 2001–2006 மற்றும் 2011–2016 ஆண்டுக்கான தமிழரசு இதழ்கள் மற்றும் சிறப்பு வெளியீடுகள் முதற்கட்டமாக எண்மியப்படுத்தப்பட்டுள்ளன.

# பொருட்காட்சிப் பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத் துறை தமிழ்நாடு அரசுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு பாலமாக அமைந்துள்ளது. மக்களின் நலன் கருதி, அரசு செயல்படுத்திவரும் நலத்திட்டங்கள், சாதனைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் ஈடுபாட்டை மக்களிடையே இத்துறையின் பொருட்காட்சிப் பிரிவு நேரடியாக ஏற்படுத்தி வருகிறது.

இதன் மூலம் பொதுமக்கள் அனைத்து விவரங்களையும் நேரில் அறிந்து, உரிய பயன்களைப் பெறப் பொருட்காட்சி ஏதுவாகிறது.

காட்சிகள் காண்பவர் மனங்களில் எளிதாகவும் வலிமையாகவும் பதியும் என்பதால், பொருட்காட்சிகள் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை விளக்கங்களைப் பொதுமக்கள் குடும்பத்துடன் வருகை தந்து நேரில் கண்டுகளித்துப் பயன்பெற ஏதுவாக அமைகின்றன. அரசுப் பொருட்காட்சிகள் விழாக் காலங்கள் மற்றும் விடுமுறை நாள்களில் மாவட்டத் தலைநகரங்களில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் நடத்தப்படுகின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில், அரசினுடைய திட்டங்கள் சிறந்த முறையில் பொதுமக்கள் எளிதில் சென்றடையும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டு, விளம்பரப்படுத்தப்படுகின்றன.



பெரும்பாலும், அரசுப் பொருட்காட்சிகள் மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறுவதால் அப்பகுதியைச் சார்ந்த கிராம மற்றும் நகர்ப்புற மக்கள் குடும்பத்துடன் சென்று அரசுத் துறைகளின் திட்டங்களையும் சாதனைகளையும் அறிந்து கொண்டு, தேவையான தகவல்களைப் பெறுவதுடன், பொழுதுபோக்கு நிகழ்வுகளைக் கண்டுகளித்து, மனநிறைவு பெறுவதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன.

மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் தமிழக அரசின் சார்பில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் பங்கேற்கின்றன. இப்பொருட்காட்சிகள், மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு, நேரடியாகவும் மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பை அளித்து வருவதும் சிறப்பான ஒன்றாகும். மேலும், இப்பொருட்காட்சிகளில், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில், ஆண்டுதோறும் 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் மற்றும் ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் சுழற்சி முறையில், 4 மாவட்டங்களிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

இதுவரை, செய்தி மக்கள் தொடர்புத் துறையால் 183 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் அரசுக்கு ஏறத்தாழ 37 கோடியே 65 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் நிகர வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

**தனியார் பொருட்காட்சிகள்**

முன்னர் வணிக நோக்குடன், விதிமுறைகள் ஏதுமின்றி நடத்தப்பட்டு வந்த தனியார் பொருட்காட்சிகள், தற்பொழுது முறைப்படுத்தப்பட்டு, பொதுமக்களின் நன்மைக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் உரிய விதிமுறைகள் வகுக்கப்பட்டு, சார்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலம் தொடர்புடைய நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

**புதுடெல்லி மலர்ப்பேரணி**

புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப் பேரணி விழாவில் இந்திய துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது. 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற மலர்ப்பேரணி விழாக்களில் தமிழ்நாடு அரசு பங்கேற்று முதல் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.



**குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்**

சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அரசின் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில், அரசுத் துறைகளின் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடத்திட, அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும், சென்னை மற்றும் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்து கொள்வதும் இத்துறையின் முக்கியப் பணிகளாகும்.

புதுடெல்லியில் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், பொங்கல் விழாவினைச் சித்திரிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி அகில இந்திய அளவில் இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். 2016ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பிற்குத் தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டத்தில் வசித்துவரும் “தோடர்கள்” என்ற மலைவாழ்ப் பழங்குடி இனத்தினரைக் குறிக்கும் வகையில் அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டு, பங்கேற்கப்பட்டது. 2017ஆம் ஆண்டின் குடியரசு நாள் விழா அணிவகுப்பில் தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலையான கரகாட்டத்தை விளக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி அகில இந்திய அளவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மேலும், சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி 2012ஆம் ஆண்டில் முதல் பரிசும், 2013, 2014, 2015, 2016 ஆகிய ஆண்டுகளில் இரண்டாம் பரிசும், 2017ஆம் ஆண்டு மூன்றாம் பரிசும் பெற்றுள்ளது.

### சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி

ஆண்டுதோறும் சென்னைத் தீவுத்திடலில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், இத்துறை பங்கேற்று அரசின் கொள்கைகள், நலத்திட்டங்கள், அரசின் சாதனைகள் குறித்த விளக்கங்களைப் பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் விளக்கப்படங்கள் மற்றும் காட்சி மாதிரிகளுடன் தனி அரங்கு திறன்பட அமைத்து வருகின்றது.

### புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி

புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழகத்தின் சார்பில், இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று, அறிவிக்கப்பட்ட கருப்பொருளைச் சார்ந்து, தமிழக அரசின் அனைத்துத் துறைகள் தொடர்பான கொள்கை விளக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்கங்களை வெளிக்கொணர்ந்து வருகிறது. இப்பொருட்காட்சி அகில இந்திய அளவில் நடைபெறுவதால், அனைத்து மாநிலங்களும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை அறிந்து கொள்ள நல்வாய்ப்பாக அமைந்துள்ளது.



இப்பொருட்காட்சிகள் பெரும்பான்மையோருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவும் வழி வகை செய்கின்றன.

### ஒன்றியங்களில் சிறு கண்காட்சிகள்

தமிழக அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 2011–2016 நிதியாண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசின் சாதனையை விளக்கும் வகையில், சிறு கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அக்கண்காட்சிகளை 20,90,360 பேர்கள் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளனர். அதைப்போன்று வருகின்ற நிதியாண்டுகளிலும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் சிறு கண்காட்சிகள் நடத்தப்படும்.

### புகைப்படக் கண்காட்சி

மாவட்டங்கள்தோறும் திருவிழாக்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் பங்கு கொள்ளும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள் ஆகியவற்றில், அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் குறித்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சிகளை நடத்த, நிதியாண்டு ஒன்றிற்கு ரூ.10,000/– வீதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2011–2016 வரையிலான நிதியாண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் 32 மாவட்டங்களிலும் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இப்புகைப்படக் கண்காட்சியினை மொத்தம் 15,28,050 பேர் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளனர். இதைப்போன்று அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், வரும் நிதியாண்டுகளிலும் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்படும்.

மேலும், அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், கிராமங்களில் நடத்தப்படும், மக்கள் குறை தீர்க்கும் மனு நீதி நாள் முகாம் நிகழ்ச்சிகளின் பொழுதும், சிறிய அளவிலான, பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**நவீன எல்.இ.டி மின் விளக்குப் பலகை**

அரசுப் பொருட்காட்சிகளுக்கு வருகைதரும் பொதுமக்கள் அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் மற்றும் அறிவிப்புகள் குறித்த விபரங்களை அறிந்து பயன்பெறும் வகையில், மாவட்டத் தலைமையிடங்களில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சிகளில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் நவீன எல்.இ.டி மின் விளக்குப் பலகைகள் வாயிலாக விளம்பரப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**2011 முதல் 2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் அரசு பொருட்காட்சி கிடங்கு, இரும்பு வளைவுத் தகடுகள் மற்றும் தெருவிளக்கு மின்கம்பங்கள்**

கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் சேலம் மாவட்டத்தில் நவீன வசதிகளுடன் கூடிய அரசு பொருட்காட்சி கிடங்கு கட்டப்பட்டுள்ளது. மேலும் ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் புதிய இரும்பு வளைவுத் தகடுகள், தெருவிளக்கு மின்கம்பங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

## மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழ்நாட்டிலுள்ள மாவட்டத் தலைநகரங்களில் 32 செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் சிறப்பான பணிகளை மேற்கொண்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மிக இன்றியமையாத உறுப்புகளாக விளங்குகின்றன.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணிகளில் மிக முக்கியமான பங்கை வகிக்கும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் தமிழ்நாடு அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் மற்றும் அரசின் புதிய அறிவிப்புகளைப் பயனாளிகளான பொதுமக்களுக்குச் செய்தி இதழ்கள், தொலைக்காட்சிகள், வானொலி மற்றும் இணையத்தளங்கள் போன்ற ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்தும் பணியினைச் செம்மையுறச் செயல்படுத்தி வருகின்றன.

மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அரசு அறிவிக்கும் நலத்திட்டங்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் அரசின் சாதனைகளைப் பொதுமக்கள் அறியும் வகையில் விளம்பரம் செய்வதுடன், அரசு நலத்திட்டங்களின் பலனைப் பயனாளிகள் முழுமையாகப் பெறுவதற்கு ஏதுவாக, அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்கும் பணியினையும் மேற்கொண்டு வருகிறார்கள்.



மேலும், மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஊடகங்களுக்கு அரசின் செய்தி வெளியீடுகள், வீடியோ பதிவுகள் மற்றும் புகைப்படங்களை வழங்குதல், மக்கள் அதிக அளவில் கூடுமிடங்களில் நவீன எல்.இ.டி. வாகனங்கள் மூலம் வீடியோ படக்காட்சிகள் நடத்துதல், பத்திரிகையாளர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், மாவட்ட நிருவாகம் மேற்கொள்ளும் சமூகப் பணிகளைப் பார்வையிடப் பத்திரிகையாளர்களை அழைத்துச் செல்லுதல், கேபிள் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப்பணி செய்தல், அரசு விழாக்களை நடத்துதல், பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் மற்றும் சிறு கண்காட்சிகள் நடத்துதல், நினைவகங்களைப் பராமரித்தல் போன்ற இன்றியமையாத பணிகளைச் செய்து வருகிறார்கள்.

## செய்தி நிலையங்கள்

தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின்கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

செய்தி நிலையங்களில் மொழி, இலக்கியம், வரலாறு, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள், நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும், இச்செய்தி நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ– மாணவியர் பயன்படுத்திப் பயன் அடைந்து வருகிறார்கள்.

## மாநிலச் செய்தி நிலையம், சென்னை

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடந்த 2009ஆம் ஆண்டு இடிக்கப்பட்ட கலைவாணர் அரங்கம் மீண்டும் புதிதாகப் பிரம்மாண்டமான முறையில் கட்டப்படும் என்று அறிவித்ததுடன் கலைவாணர் அரங்கத்துடன் மாநிலச் செய்தி நிலையமும் சேர்த்துக் கட்ட ஆணை வழங்கினார்கள். அதன்படி, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கலைவாணர் அரங்கத்தின் பின்பகுதியில் ரூபாய் 2 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாநிலச் செய்தி நிலையக் கட்டடத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 14.02.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மேலும், மாநிலச் செய்தி நிலையப் புதிய கட்டடத்தில் நூலகமும் பொதுமக்கள் அமர்ந்து படிக்கக்கூடிய வகையில் படிப்பக வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலகத்தில் தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், அறிவியல், ஆன்மீகம், சிறுவர் நூல்கள், ஆங்கில நூல்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் சுமார் 57,770 நூல்கள் உள்ளன. மேலும், நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வார இதழ்கள் போன்றவை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன.

மேலும் சட்டமன்றப் பேரவை நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத்துறை வெளியீடுகள் ஆகியவை மேற்கோள் தொகுப்பு பணிக்காகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள நூல்கள் அரசின்



மேற்கோள் பணிக்காகத் தேவைப்படும் பொழுது அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இங்கு நாள்தோறும் ஏராளமான பொதுமக்கள், கல்லூரி மாணவர்கள் வருகை தந்து படித்துப் பயன்பெறுகின்றனர்.

### பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவு

பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டம் 1867–ன்படி, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் புத்தகப் பதிவாளராகவும் செயல்பட்டு வருவதன் அடிப்படையில் பல்வேறு பதிப்பகங்களின் மூலம் வெளியிடப்படும் புத்தகங்களின் இரண்டு பிரதிகள் பெறப்பட்டு முறையாகப் பதிவு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

### நூலகத்தினை நவீன முறையில் மேம்படுத்துதல்

மாநிலச் செய்தி நிலைய நூலகத்தில் புத்தகங்களைக் கணினியில் பதிவு செய்து எளிதாகத் தேடி எடுப்பதற்கு ஏதுவாக நவீன மென்பொருள், துணைக்கருவிகள் கொண்ட நவீனக் கணினியும் நூலகத்தில் வசதிகளை மேம்படுத்த புத்தக அலமாரிகள், குடிநீர் வசதி, நகல் எடுக்கும் இயந்திரம், இணையதள வசதியுடன் கூடிய கணினி போன்றவற்றை அமைப்பதற்கு ஏதுவாக 2016–2017ஆம் நிதியாண்டில் ரூ.10.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நவீன முறையில் நூலகத்தினைப் பராமரிக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பொதுமக்களும் கல்லூரி மாணவர்களும் பயனடைவார்கள்.

## நிறைவுரை

கடந்த 2016 ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 32 ஆண்டுக்கால தமிழக அரசியல் வரலாற்றைப் புரட்டிப்போட்டு, தொடர்ச்சியாக இரண்டாம் முறையும் தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்றிய நேரத்தில், தமக்கு அமோக ஆதரவளித்து, தொடர்ந்து ஆட்சி செய்யும் பொறுப்பளித்து மீண்டும் முதலமைச்சர் ஆக்கிய தமிழக மக்களுக்குத் தனது நன்றியைச் செயலில் காண்பிப்பேன் என்று உறுதி அளித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இன்று இப்பூவுலகை விட்டுப் பிரிந்தாலும் மக்களுக்கு அம்மா அவர்கள் அளித்த அந்த உறுதிமொழியைக் காப்பாற்றி, தமிழக மக்களின் வாழ்வில் வளமும் நலமும் சேர்த்திட வேண்டும் என்னும் அம்மா அவர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில், அம்மா அவர்களது வழி நடக்கும் தமிழ்நாடு அரசு செயல்படுத்துகின்ற மக்கள் நலத் திட்டங்களை, மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான வளர்ச்சிப் பணிகளை, துறைதோறும் படைக்கின்ற சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கின்ற மகத்தான பணியை, புதிய எழுச்சியோடும், மிகுந்த ஆர்வத்தோடும் திறம்படச் செயலாற்ற செய்தி மக்கள் தொடர்புத்துறை உறுதி பூண்டிருக்கிறது.

**கடம்பூர் ராஜூ**
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்



### இணைப்பு–1

### வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2017-2018

**தொகை (ரூபாய் ஆயிரத்தில்)**

| | | 2015-2016 கணக்குகள் | 2016-2017 வரவு செலவு திட்ட மதிப்பீடு | 2016-2017 திருத்த மதிப்பீடு | 2017-2018 வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 73,39 | 67,00 | 86,78 | 70,00 |
| 2220 | செய்தி மற்றும் விளம்பரம் | 87,27,21 | 65,54,05 | 73,87,51 | 71,45,37 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 87,86 | 1,03,50 | 1,03,50 | 1,03,50 |
| 2250 | ஏனைய சமூகப்பணிகள் | 11,61 | 12,98 | 13,10 | 13,94 |
| 4220 | செய்தி விளம்பரம் குறித்த மூலதனச் செலவு | 3,98,26 | 1 | ---- | ---- |
| | **மொத்தம்** | **92,98,33** | **67,37,54** | **75,90,89** | **73,32,81** |